விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 04 புதன்கிழமை (21.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276

## ஜனாதிபதி மகிந்த -கிளின்டன் நியூயோர்க்கில் சந்திப்பு

### போர்க்குற்ற விவகாரம் குறித்துப் பேச்சு?

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கும் இடையில் நியூயோர்க்கில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது எவ்வாறான விடயங்கள் குறித்துப் பேசப்பட்டது என்பது பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை. எனினும் இலங்கை போர்க் குற்ற விவகாரங்கள் தொடர்பாக பேச்சுகள் இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)




## ஜெனிவாவில் பொங்கு தமிழ்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜெனிவா ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைகுழுவின் முன்பாக உள்ள ஈகப் பேரொளி முருகதாசன் திடலில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகள் பலவற்றிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சிபூர்வமாக கலந்துகொண்டிருந்தனர்.

இந் நிகழ்வு பி.ப. 2மணியளவில் கடும் மழைக்கு மத்தியில் ஜெனிவா புகையிர நிலையத்தில் இருந்து ஐக்கிய நாடுகள் சபை நோக்கி அணிவகுப்பு நிகழ்வுடன் ஆரம்பமாகியது.

இப்பேரணியை வரவேற்று ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் இருந்து பிரான்ஸ் தமிழ் சோலை சோதியா (20ஆம் பக்கம் பார்க்க)

## தனித்திருந்த பெண்ணின் மீது மர்ம நபர் தாக்குதல்! நவாலியில் சம்பவம்

(நவாலி)

நவாலி அரசடிப் பகுதியில் பட்டப்பகலில் மர்ம மனிதன் தாக்கியதால் இளம் பெண் ஒருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக பணிபுரியும் இராஜேந்திரன் காயத்திரி(வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக வேலைபுரிவதால் இரவுநேர வேலை முடிவுற்றதும் காலை வீட்டுக்கு சென்று உறங்கியுள்ளார். இந்நிலையில் வீட்டின் பின்வாசல் அருகே (19ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்குச் சென்ற ஜனாதிபதிக்கு வரவேற்பில்லை

### வெளியில் செல்லவும் கட்டுப்பாடு

(நியூயோர்க்)

ஐ.நா.பொதுச் சபையின் 66ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்க சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நியூயோர்க் விமான நிலையத்தில் வரவேற்க அமெரிக்க அதிகாரிகள் எவரும் செல்லவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுக்கான அரசு முறைப் பயணமாக அவர் செல்லாததால் அமெரிக்க அதிகாரிகள் மகிந்த ராஜபக்ஷவை வரவேற்கச் செல்லவில்லை. சிறிலங்கன் விமான சேவை அதிகாரிகளும் நியூயோர்க்கில் உள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட இலங்கைத் தூதரக அதிகாரிகளுமே ஜனாதிபதியை வரவேற்றுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றுவார் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாணப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய அரசு திட்டம்

### யாழ். வந்த அமைச்சர் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

2012-ம் ஆண்டில் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் ஊடாக வட மாகாண பாடசாலைகள் பாரியளவில் அபிவிருத்தி செய்யப்படுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வட மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வதற்கு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற வடக்கு கல்வி அபிவிருத்தி மாநாட்டில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் மற்றும் வடக்கு மாகாண கல்விஅமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகள் பணி பகிஸ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சட்டத்தரணிகள் நேற்று முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக யாழ். மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவரும் யாழ்.மாநகர சபையின் சட்ட ஆலோசகருமான அருளம்பலம் இராஜரட்ணம் தெரிவிக்கையில்,

யாழ். நீதவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மேற்கொண்ட வன்முறைகளுக்கு அடேல் பொறுப்புக் கூற வேண்டும்

### மனித உரிமை கண்காணிப்பகத்திடம் அரசு வலியுறுத்தல்


உருத்திரகுமாரன்

வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் முப்பதாண்டு கால வன்முறைகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்திடம் இலங்கை வலியுறுத்தியுள்ளது.


சவேந்திர சில்வா


பாலித

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித்த ஹோகனவும், பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் மூத்த பிரதிநிதிகளை நியூ யோர்க்கில் சந்தித்தபோதே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.


அபேல்

இதன் போது வன்னியில் இடம்பெற்ற போரின் இறுதிக் கட்ட வன்முறைகள் தொடர்பிலேயே மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் கரிசனை கொண்டுள்ளதாக (20 ஆம் பக்கம் பார்க்க)

AiR MARK
Travels & Tours
IATA
கொழும்பு/ லண்டன் - 39000/=
கொழும்பு/ சென்னை/ கொழும்பு - 12500/=
கொழும்பு/ ரொரன்ரோ/ கொழும்பு - 127500/=
SUBJECT TO CHANGE
Call 0777380557/ 0777727617
No. 05, Stanley Rd, Jaffna.
379 1/2, Galle Road, Colombo - 06
94, Chatham Street, Colombo - 01

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வர்த்தகப் பெருமக்களே...

வியாபாரத்தைப் பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியா பார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌர வத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-03
0729994777
0117902938


# எனது குறிக்கோள் நிறைவேறுவதற்கு நானே தடையாக இருந்து விட்டேன்

## வவுனியாவில் முதலிடம் பெற்ற மாணவி செவ்வி



(வவுனியா)

அகில இலங்கை ரீதியில் முதலா மிடத்தைப் பெறவேண்டும் என்ற குறிக்கோளுடன் கல்வியைக் கற்றேன்.

நான்விடையளிக்கும்போதுஎனது கவனயீனப் பிழையினால் முதலாவது இடத்தை பெறும் வாய்ப்பு இல்லாமல் போனதாக 193 புள்ளிகளைப்பெற்று வவுனியா மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் வடமாகாணத்தில் 2ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் தமிழ் மொழிமூலம் மூன்றாமிடத்தையும் பெற்ற மாணவியாகிய சர்மிகா சர்வானந்தன் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

வவுனியா இறம்பைக்குளம்மகளிர் மகா வித்தியாலய மாணவியாகிய சர்மிகா சர்வானந்தன் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 193 புள்ளிகளைப்பெற்று தேசிய ரீதியில் மூன்றாவது இடத்தைப் பெற்றார். அவர் இது குறித்து தெரிவிக்கையில்,

நான் ஆரம்பக்கல்வியை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் இருந்தே கற்று வருகிறேன்.

எனது பெற்றோர் வவுனியா ஆயுள்வேத மத்திய மருந்தகத் தில் ஆயுள்வேத வைத்தியர்களாக கடமையாற்றுகிறார்கள்.

எனது கல்வியின் வெற்றிக்கு பாடசாலை அதிபரும் வகுப்பாசிரியருமே உறுதுணையாக இருந்தார்கள். அத்துடன் எனது பெற்றோரின் ஊக்கமும் அரவணைப்புமே நான் முன்னிலையில் வருவதற்கு வழி வகுத்தது.

நான் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெறவேண்டும் என்ற குறிக்கோளுடன் கல்வியைக் கற்றேன்.

ஆனால் நான்விடையளிக்கும் போது எனது சிறு தவறுதலால் தேசிய ரீதியில் மூன்றாமிடத்தைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருந்தாலும் எனது பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

எனது எதிர்கால லட்சியம் ஒரு வைத்தியராக வந்து ஏழைமக்களுக்கு சேவையாற்றி நாட்டிற்கு நல்லதொரு பிரஜையாக திகழவேண்டும் என்பதாகும் என்று அவர் தெரிவித்தார். (ச-5)

# விபத்தில் மாணவி காயம்

துவிச்சக்கர வண்டியும், டிப்பரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்த பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இவ்விபத்து சம்பவம் நேற்று மாலை கிளிநொச்சிவைத்தியசாலைக்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தரம் 10ல் கல்வி பயிலும் த.சலோமி (வயது 15) என்ற பாடசாலை மாணவியே படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். மாணவியைமோதியடிப்பர் சாரதியிடம்கிளிநொச்சிபொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-8)

# 'நெய்தல்' இதழ் வெளியீடு

நெய்தல் இதழ் வெளியீடும் விருது வழங்கலும் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணியளவில் வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மு.ஆ.சுமன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதனும் சிறப்புவிருந்தினர்களாகபருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி செல்வசுகுனா, வல்வைமகளிர்மகாவித்தியாலயஅதிபர் திருமதி சேதுலிங்கம் மங்களேஸ்வரி ஆகியோர்கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மதிப்பீட்டுரையை கே.சிவனேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். (ச-8)

# அமைச்சர் டக்ளஸை கைது செய்ய முடியாது

## இந்.மத்திய அரசு பதில் மனு

(சென்னை)

சென்னையில் இடம்பெற்ற கொலை வழக்கொன்றில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்ய முடியாது என உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த ஆண்டு உத்தியோக பூர்வ விஜயமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது டக்ளஸ் தேவானந்தாவை உடனடியாகக் கைது செய்ய உத்தரவிடக் கோரி சிறைக் கைதிகள் உரிமைகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் புகழேந்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு பொதுநல மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவுக்கு மத்திய அரசின் சார்பில் இலங்கை விவகாரங்களுக்கான வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கே.எம்.பி.சர்மா பதில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவில் கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக இலங்கையுடன் இந்தியா எவ்வித உடன்படிக்கையும் செய்து கொள்ளவில்லை.

இருப்பினும் கைதிகள் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் இரு நாடுகளுக்கு இடையே 1978ல் கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா அந்நாட்டு அமைச்சராக உள்ளார். இந்தியாவுக்கு வருகை தந்த போது அவரை கைது செய்யமுடியாது.

அவரை கைது செய்வது என்பது இரு நாடுகளுக்கிடையேயான தூதரக உறவுக்கு எதிரானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த மனுவை நிராகரிக்க வேண்டும் என்றும் இப்பதில் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வழக்கை விசாரணை செய்த நீதிபதிகள் வழக்கு விசாரணையை நான்கு வாரகாலத்துக்கு ஒத்திவைத்துள்ளனர். (ச-5)

# வன்னி தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம்

## அமைச்சர் பந்துல உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னி பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதி விரைவில் பெற்றுக் கொள்ளப்படுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் யாழ். பொது நூலகத்தில் வடமாகாண கல்வி அபிவிருத்தி கூட்டம் நடைபெற்றது. இதன்போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது.

எனினும் வன்னி பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு அந்நியமனம் வழங்கப்படவில்லை. எனவே வன்னி பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கான விஷேட பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிப்பேன்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் ஆசிரிய உதவியாளர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு 2வருட பயிற்சி வழங்கப்பட்டு ஆசிரியசேவைக்குள் உள்வாங்கப்படுவர்.

இவர்களுக்கானபயிற்சி பலாலி ஆசிரிய கலாசாலையிலும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் வழங்கப்படும்.

பயிற்சிக் காலத்தின் போது ஆசிரிய உதவியாளர்கள் வாரத்தில் 3 நாட்கள் பாடசாலையில் கடமையாற்றுவதுடன் 3 நாட்கள் பயிற்சி பெற்றுக் கொள்ளவேண்டும். இவ்வாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ச-5)


ENGLISH, SINHALA & COMPUTER CLASSES

IELTS, SPOKEN ENGLISH வகுப்புக்கள்

வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

சிங்கள வகுப்புக்கள்

பேச, எழுத, வாசிக்க பூரண தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.

கணனி வகுப்புக்கள்

MS Office, DTP, Internet & E-mail, Web & Graphic Designing, Hardware & Networking, Kids Programe, ICT, GIT, C,C#, Java, VB.Net etc... பூரண தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்

NORTH LEAD
EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.


# பாலியல் துஷ்பிரயோகம் செய்த குடும்பஸ்தர் கைது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு இறுப்பிட்டியில் பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பெண் ஒருவரே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளார்.

பிரஸ்தாப பெண் பஸ்ஸிலிருந்து இறங்கி ஆட்டோவில் சென்ற சமயம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதவான் பிரஸ்தாப பெண்ணை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்து மாறும் சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (எ-1)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிறிகரன்
சிறிசங்கர்
176



தர்மகுலசிங்கம்
விமலலோஜன்
174

யா/உடுவில் மகளிர் கல்லூரியில் கல்விகற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற எமது சக உத்தியோகத்தர்களது புதல்வர்களை இன்னும் பல சாதனைகள் படைக்க மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
தெல்லிப்பளை பிரதேச செயலக
சமுர்த்தி உத்தியோகத்தர்களும்
முகாமையாளர்களும்
(6187)

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை




- 72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள், வீசா சேவைகள், கடவுச்சீட்டு புதுப்பித்தல் மற்றும் இணைந்த சேவைகள்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
(நிபந்தனைக்குட்பட்டது)
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# கடன்பட்டார் நெஞ்சம்!

ஒரு ஊரிலே ஒருவர் இருந்தார். அவருக்கு அவசரமாகப் பணம் தேவைப்பட்டது. அதற்காக இன்னொருவரைத் தேடிச் சென்று கடன் கேட்டார்.

அதற்கு அவர், " சாட்சியோடு வந்தால், கடன் கொடுக்கிறேன்!" என்றார்.

" இறைவனுடைய சாட்சியே போதுமே!" என்றார் இவர்.

" நான் கொடுக்கிற கடனுக்கு யாராவது பொறுப்பு ஏற்கவேண்டாமா? அப்படி... கடனுக்குப் பொறுப்பு ஏற்கக்கூடிய யாராவது ஒருவரை அழைத்து வந்தால், கடன் கொடுக்கிறேன்" என்றார்.

" உங்கள் கடனுக்கு இறைவனையே பொறுப்புத் தாரியாக்குகிறேன்" என்றார் இவர்.

சரியென்று கூறினார். கேட்ட கடனைக் கொடுத்தார். குறிப்பிட்ட தவணைக்குள் திருப்பித் தரவேண்டுமென்ற நிபந்தனையுடன் கொடுத்தார்.

கடன் வாங்கியவர் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொண்டார். அதன்பின் அவர் பிழைப்புத்தேடி கடல் கடந்து வேறு தேசத்திற்குச் சென்றுவிட்டார். சென்ற இடத்தில் அதிக பணம் சம்பாதித்தார்.

கடன் திருப்பி கொடுக்க வேண்டிய நாள் நெருங்கியது. எப்படியாவது குறிப்பிட்ட நாட்களுக்குள், சொன்னபடி... கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்து, உடனே ஒரு படகொன்றை ஏற்பாடு செய்தார்.

அக்காலத்தில் வேறு வசதிகள் எதுவும் கிடையாது. படகுதான் பிரயாணம் செய்வதற்கு உதவியது.

ஆனால், உடனடியாக பிரயாணம் மேற்கொள்ள இவருக்கு படகு எதுவும் கிடைக்கவில்லை.

நாட்கள் நெருங்க கடன்பட்ட நெஞ்சம் கலங்க ஆரம்பித்தது.

ஒரு யோசனை செய்தார்.ஒரு மூங்கில் குழாயை எடுத்து அதைச் சுத்தம் செய்தார்.அதனுள்ளே இவர் திருப்பிக் கொடுக்க வேண்டிய பணத்தை வைத்தார். கூடவே தன்னுடைய நிலைமையை விளக்கி ஒரு கடிதத்தையும் எழுதி வைத்தார். தண்ணீர் உட்புகா வண்ணம் கெட்டியாக மூடி அடைத்தார். அதை எடுத்துக் கொண்டு கடற்கரைப் பக்கமாகச் சென்றார்.

அங்கே நின்று கொண்டு, இறைவா... உன்னுடைய அடியார் ஒருவரிடம் நான் கடன் வாங்கினேன்.அது உனக்குத் தெரியும்! அவர் சாட்சி கொண்டுவரச் சொன்னபோது... நான் உன்னையே சாட்சியாக்கினேன். கடனுக்கு யார் பொறுப்பு என்றுகேட்டபோது, உன்னையே பொறுப்புத்தாரி என்று கூறினேன்.

இதற்கு அவர் சம்மதப்பட்டு கடன் வழங்கினார். திருப்பிக்கட்ட வேண்டிய காலம் நெருங்கியபோது அந்தக்கடன் போய்ச் சேர எந்த வழியும் கிடைக்கவில்லை... என்ன செய்வது. வேறுவழி தெரியாமல்தான் இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன். எப்படியாவது இதை அவரிடம் கொண்டு போய்ச் சேர்த்து விடு" என்று மனமுருக வேண்டினான்.

மூங்கில் குழாயை கடலில் வீசி எறிந்தார். கடன் கொடுத்தவர் மறு கடற்கரையிலே வந்து காத்துக் கிடந்தார். கடன் கொடுத்தவரை காணவில்லையென்று பார்த்துக்கொண்டிருந்தார்.அந்தச் சமயத்தில் அவர் காலடியில் மூங்கில் குழாய் ஒன்று ஒதுங்கியதை அவதானித்தார். பணமும் கடிதமும் இருந்தது. அவருக்கு ஆச்சரியம். சிறிது நாட்கள் சென்ற பின்னர் கடன் வாங்கிய வரும் வந்து சேர்ந்தார்.

" ஐயா... தாமதமாக வந்து சேர்ந்து இருக்கிறேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இதோ உங்களிடம்பெற்ற கடன் தொகையை வைத்துக் கொள்ளுங்கள்" என்று கொடுத்தார்.

"சகோதரரே! அதற்கு அவசியம் இல்லை. எனக்கு வரவேண்டிய பணம் வந்து சேர்ந்து விட்டது" என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# வடபகுதியில் 400 இடங்களில் தொல்பொருட்கள் இருக்கலாம்

(கொழும்பு)

வடபகுதியில் தொல்பொருட்கள் இருக்கலாம் என நம்பப்படும் 400 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் போது இந்தத் தகவல்கள் கிடைத்துள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரை கண்டறியப்படாத பல தொல்பொருட்கள் இந்தப் பிரதேசத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் இந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளின் போது இந்த இடங்கள் இனங்காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதேசங்கள் தொல்பொருள் ஆராய்சித் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டு சட்ட ரீதியான முறையில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

(4-2)

# பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விவசாய குழுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச விவசாயக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பூநகரி பிரதேச செயலகத்தில் பூநகரி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெரும்போக பயிர்ச்செய்கை திட்டமிடல் தொடர்பாகவும் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு விவசாயக்குளங்கள் புனரமைப்பு, உவர் நீர்த்தடுப்பணை அமைத்தல், கால் நடை உற்பத்திக்கான அபிவிருத்தி, தெங்கு பயிர்ச்செய்கை அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேலும் இப் பிரதேசத்திற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இக் கூட்டத்தில் உதவித்திட்டமிடல் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர்கள், கிராம அலுவலர், காணி உத்தியோகத்தர், கமக்கார அமைப்புக்களின் தலைவர், செயலாளர் பூநகரி பிரதேச பெரும்போக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-3)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 30 | 60 | 35 |
| மரவள்ளிக் கிழங்கு | 35 | 40 | 25 |
| கோவா | 30 | 80 | 30 |
| கரட் | 60 | 90 | 50 |
| பூசணி | 25 | 40 | 25 |
| புடோல் | 30 | 20 | 30 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 60 |
| பாகற்காய் | 60 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 110 | 120 |
| பயற்றங்காய் | 30 | 80 | 80 |
| லீக்ஸ் | 50 | 80 | 50 |
| பீற்றூட் | 15 | 20 | 15 |
| கறிமிளகாய் | 50 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 20-25 | 90 | 70 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 15 |
| தேசிக்காய் | 180 | 180 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

*21.09.2011*
*(புரட்டாதி 4, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*நவமி பின்னிரவு 2.57 மணிவரை*
*திருவாதிரை முன்னிரவு 11.05 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*
*உலக சமாதான தினம்.*

**மேடம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், போசன சுகமுண்டு.

**இடபம்** நிதிநிலை உயரும் நாள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும், வாக்கு மேன்மையுண்டு, நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**மிதுனம்** இறைவழிபாட்டல் இன்பம் காண வேண்டிய நாள்,இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், காணாமற்போன பொருளொன்று கைக்குக் கிடைக்கும், வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவுவர்.

**கடகம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், பால்ய நண்பர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள்.

**சிங்கம்** மனங்குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், பெரிய மனிதரின் வருகையால் விருப்பங்கள் நிறைவேறும், வீட்டிற்கு விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள்,அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர்,தொழில் வளர்ச்சியுண்டு,விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** தடைகள் விலகி தனலாபம் பெருகும் நாள்,காரிய வெற்றிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்,பொருளாதார நிலை உயரும், கட்டுப்பாடான நாள்,தந்தை வழி உறவினரால் அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** உங்கள் செயற்பாடுகளில் பெரியவர்கள் குறைகண்டு கொள்ளலாம், கௌரவக் குறைவான நாள், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்,போசன சுகமுண்டு.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், அரசு வழியில் அனுகூலமுண்டு, வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**மகரம்** பாக்கிகள் வசூலாகி பண வரவைக் கூட்டும் நாள்,உறவினர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர், கூட்டுத் தொழில் தனித்தொழிலாக மாறலாம்,உடல் நலம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**கும்பம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள்,வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்களை வகுப்பீர்கள்,பிள்ளைகளால் பெருமை சேரும் நாள்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், வாகன சுகமுண்டு, உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

# யாழ்ப்பாண வாழ்வியல் என்னும் தொனிப்பொருளிலான பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் தொன்மை, பாரம்பரியம், பண்பாடு என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை ‘யாழ்ப்பாண வாழ்வியல்’ என்னும் தொனிப்பொருளில் பொருட்காட்சி இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பொருட்காட்சி தொடர்பாக பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அதில் மேலும் அவர்கள் தெரிவிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையுடன் கலைக்கேசரி இணைந்து இப்பொருட்காட்சியை ஏற்பாடு செய்கின்றது.

குடாநாட்டின் புராதன குடிகள், புராதன குடியிருப்புகள், வாழ்வியல் முறைமைகள், குடிப்பரம்பல் இவற்றுக்கான இன்றளவில் உள்ள தொல்லியல் சான்றுகள் மற்றும் தடயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இப்பொருட்காட்சி அமையவுள்ளது.

குடாநாட்டின் தொன்மை, பாரம்பரியம், பண்பாட்டை வெளிப்படுத்தும் சின்னங்கள் பொருட்களாகவும், மாதிரிகளாகவும், புகைப் படங்களாகவும் கால வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கண்காட்சியில் பல்கலைக்கழக அரும்பொருட்காட்சிச்சாலையில் உள்ள அரிய தொல்லியல் பொருட்களும், குடாநாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பல்கலைக்கழக மாணவர்களால் சேகரிக்கப்பட்ட பொருட்களும் பொதுமக்களால் மனமுவந்து அன்பளிப்பு செய்யப்பட்ட மற்றும் இரவலாக வழங்கப்பட்ட பொருட்களும் இன்னும் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட பொருட்களும் உள்ளடங்கும்.

பல்கலைக்கழக வளாகத்தில் கண்காட்சி நடைபெறும் அதேவேளை ஆய்வரங்கமும் நடைபெறும். இதற்கென இந்தியாவிலிருந்து தொல்லியல் வரலாற்று அறிஞர்களான பேராசிரியர் இரராஜன், பேராசிரியர் செல்வகுமார், பேராசிரியர் அதியமான், கலாநிதி இரர்ஜகோபால் ஆகியோரும் இலங்கையின் தென்பகுதி பல்கலைக்கழகங்களிலிருந்து 15 இற்கும் மேற்பட்ட அறிஞர்களும் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இவ்வைபவத்தின் போது பிரதம விருந்தினராக இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திசநாயக்கவும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பொருட்காட்சியில் விவசாயம், பண்டைக்காலம் முதல் இற்றைவரையிலான நீர்ப்பாசன வடிகாலமைப்பு முறைகள் மற்றும் விவசாயக் கருவிகள், வீட்டுக் கட்டட அமைப்பு முறைகள், ஆலய கட்டட அமைப்பு மற்றும் தேர்ச்சிற்பக் கலாசாரம், பாரம்பரிய மீன்பிடி முறைமைகள், அவற்றுடன் தொடர்புபட்ட உபகரணங்கள், கருவிகள், அன்றாட இரும்புப் பாவனைப் பொருட்கள், தொழிற் கருவிகள், வாங்கு, கட்டில், கொக்கைச் சத்தகம், காம்புச் சத்தகம் துலா, தளபாடங்கள் என்பனவும்

- பெட்டி, பட்டை, பாய் போன்ற கைப் பணிப் பொருள்கள், உணவுப் பதார்த்தங்கள்
- கடல், தரை, போக்குவரத்தில் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய வாகனங்கள், இரட்டை மாட்டு வண்டில், கப்பல், வள்ளங்கள்
- பிறப்பு முதல் இறப்பு வரையிலான தனித்துவம் மிக்க சடங்குகள், சம்பிரதாயங்கள்
- அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட கலவோடுகள், நாணயங்கள், மணிகள், சங்குகள், தாளிகள்
- ஆண், பெண் இருபாலாரினதும் மோதிரம், சங்கிலி என்பவற்றோடு அட்டியல், பதக்கம், காப்பு, தோடு போன்றவையும், பாரம்பரிய உணவு வகைகளான திணையரிசி, வரகரிசி, கூழ், கஞ்சி... என்பனவும் கல்வி சார்ந்தவையாக திண்ணைப் பாடசாலை, ஓலைச்சுவடிகள், இசைக்கருவிகள் ஆகியவற்றோடு மத மற்றும் ஆலய விழாக்கள் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத பண்டிகைகள், கோயில், தேவாலயம், மசூதி, திருவிழாக்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேற்குறித்த விடயங்கள் பொருட்களாகவோ, புகைப்படங்களாகவோ, ஓவியங்களாகவோ காட்சிக்கு வைக்கப்படும். அவை யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் முறைமைகளை சித்திரிப்பனவாக அமையும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (4-6)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாட்டி ஏசியன் அணி சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்திய 3 கழகங்களுக்கிடையேயான 10 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாட்டி ஏசியன் அணி சம்பியனாகியுள்ளது.

இத்தொடரில் சரவணை நாகபூஷணி விளையாட்டுக்கழகம், சாட்டி ஏசியன் விளையாட்டுக்கழகம், மண்கும்பான் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்கள் பங்கு பற்றின.

இதில் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்று சாட்டி ஏசியன் மற்றும் மண்கும்பான் நண்பர்கள் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று சாட்டி ஏசியன் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

சாட்டி ஏசியன் அணி 10 ஓவர்கள் நிறைவில் 68 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் சா.செல்வரூபன் அதிகூடிய ஓட்டமாக 27 ஓட்டங்களை தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மண்கும்பான் நண்பர்கள் அணி 10 ஓவர்கள் நிறைவில் 61 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் சாட்டி ஏசியன் அணியின் அதிரடி பந்து வீச்சாளர் ஜனகன் 5 விக்கெட்டுக்களை தனது அணிக்காக கைப்பற்றினார். அத்தோடு சத்தியா, நிரோஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் துஸ்யந்தன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சிறந்த ஆட்ட நாயகனாக சாட்டி ஏசியன் அணியின் ஜனகன் தெரிவு செய்யப்பட்டார். இதில் தொடர் ஆட்ட நாயகனாக மண்கும்பான் நண்பர்கள் அணியின் றொக்ஷன் தெரிவு செய்யப்பட்டார், (4- 12)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்வசமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

அத்தோடு எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 6 ஆம் திகதிவரை காலை 7.30 மணிக்கு நவராத்திரி மகாலஷ்சுமி அபிஷேகமும் இடம்பெறும். (4-12)




## 42 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளையினர் வலி. வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட வித்தகபுரம், நவக்கிரிப் பிரதேசத்தைச் சேர்ந்த 42 பயனாளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வருமான உருவாக்கத்திற்காக தலா ரூபா 5 ஆயிரம் வீதம் ரூபா 21 இலட்சம் வரை சுயமுயற்சிக் கடனாக வழங்குகின்றனர்.

இக் கடன் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்கு வித்தகபுரம் பொதுஜன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயனாளிகளுக்கான கடன் தொகையை இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஈ.டி.சுமண சிறி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கையளிக்கவுள்ளார்.

அத்தோடு மீள்குடியேற்றப்பட்ட, வலி.வடக்கு அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்கு வருமான உருவாக்கத்திற்கான கடன்களை முதலாவதாக இவ் வங்கி வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-12)

## விளையாட்டுத்துறை நிர்வாகத் தெரிவு

(கரவெட்டி)

வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலகத்தில் விளையாட்டுத்துறைக்கான நிதியம் அமைப்பதற்கான ஆலோசனைக்கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் அங்கம் வகிக்கும் 48 விளையாட்டுக்கழகங்களின் வீர வீராங்கனைகள் மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டங்களில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் இந்நிதியமூடாக நிதி வழங்கப்படவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது இந்நிலையத்தின் நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. இதில் தலைவராக பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், செயலாளராக எ.அநுராகாந்தன், பொருளாளராக வி.கே.சண்முகநாதன், உப தலைவராக டி.எம்.வேதாபரணம், உப செயலாளராக ந.துரைராஜா ஆகியோரும் அத்துடன் 6 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-12-24)



வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் தரம் 5 புலமைப்பரீட்சையில் வடமாகாணத்தில் முதலிடத்தைப் பெற்ற முல்லைத்தீவு நெத்தலியாறு தமிழ் மகாவித்தியாலய மாணவன் பரமேஸ்வரன் சேதுராகவனுக்கு அமைச்சர்கள் விருந்தினை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர், என்.குமார்)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தின் பெறுபேறுகள்

**யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்**
பு.அர்ச்சயா-186,ஜெ.தருசன்-181,த.திவ்வியா-175,ர.கம்ஷிகா-167,ர.திஷானி-167, ச.அனோஸா-167,கு.வித்தியாசாகர்-166,ச.சுதர்சன்-163, ச.பிரவின்-158,வை.மதுராஜ்-155, பு.துஸிகரன்-155, த.சலோமியா-154, ஜெ.நித்தியா-153

**யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை**
ம.றொக்சன்-170,க.ஜெயந்தரன்-168, யோ.கோஜிதன்-165, சு.பிரணவன்-163, ந.நிலோஷா-162, கி.துவாரகன்-161, இ.தனுசன்-160, கி.தனுசன்-157, ம.மேனுதா-154, த.நவசாந்தன்-151

**யா/வட.இந்து மகளிர் கல்லூரி**
ஸ்ரீ.சரண்யா-179, ம.சங்கவி-174, வே.யுவத்திகா-174, கி.நஜீதா-165, செ.கம்ஷாயினி-159,அ.டிலக்ஷனா-158, ந.திவாஜினி-157

**யா/வதிரி திரு இருதயா கல்லூரி**
அ.அபிஷேகா-160,கு.குயின்சன்-157

**யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்**
ச.சாருஜா-159

**யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்**
ஜெ.அகிலன்-181,இ.கலைப்பருதி-180, ஞா.கயானி-171, த.சமரழகன்-170,செ.கௌசிக்-169, அ.ரிசாளினி-166,த.புனர்வசன்-163,பா.துளசிகா-163, கோ. கோமைந்தன்-160, சி.ரிஷிகீதன்-157, ர.ஜிந்திசன்-155.

# பிள்ளையார் கதைநூல் இலவச விநியோகம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் விநாயக பக்தர்களின் நன்மை கருதி பிள்ளையார் கதை எனும் கைநூலைப் பிரசுரித்து இலவசமாக விநியோகித்து வருகின்றது.

இந்து சமய விரதங்களுள் விநாயகர் விரதமும் பல வருடங்களாக அனுஷ்டிக்கப்பட்டு வருவதால் விநாயக பக்தர்கள் ஒன்று கூடி பிள்ளையார் கதையைப் பாராணயம் செய்யும் முகமாக இவ் இலவச வெளியீடு இடம்பெறுகின்றது.

இக்கைநூலைப்பெற்றுக்கொள்ள விரும்பும் பக்தர்கள் 10X 7 அங்குல அளவுள்ள கடிதவுறையில் தமது சுய முகவரியை எழுதி முப்பது ரூபா பெறுமதியுடைய முத்திரையை ஒட்டி வேறொரு கடிதவுறையில் வைத்து இக்கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் பிள்ளையார்கதை வெளியீடு எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் , இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, கொழும்பு -04 எனும் முகவரிக்கு அனுப்பி வைப் பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாமென இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன் தெரிவித்துள்ளார். (4-12)

# யெகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

கடவுளுடைய அரசாங்கம் வருக என்ற பெயர் கொண்ட யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு எதிர்வரும் 23, 24,25 ஆம் திகதிகளில் காலை 9.20 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

அத்துடன் மூன்று நாட்களிலும் மூன்று நாடகங்கள் நடத்தப்படவுள்ளதுடன் பேச்சுக்கள், போட்டிகள், நடிப்புகள் என்பன இடம் பெறும். (ஸ்ரீ-2)

# புலமைப் பூங்கா ஒலிப்பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான புலமைப் பூங்கா முதல் ஒலிப்பதிவு இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ். மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் அலைவரிசைப் பிரிவு ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் அறிவுத்திறனை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (4-12)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## சித்த மருத்துவ அலகு
### 2010/2011 கல்வியாண்டிற்கான கற்றல் செயற்பாடு ஆரம்பம்

சித்த மருத்துவ அலகு 2010/2011 கல்வியாண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக் மாணவர்களுக்கான அறிமுகவிழாவும், கற்றல் செயற்பாடுகளும் எதிர்வரும் 26.09.2011 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடியிலுள்ள சித்த மருத்துவ அலகில் ஆரம்பமாகும். அன்று காலை சகல மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.
19.09.2011
(சி-4500)



- தபால் மூலம் -
## ஆறு மாத கால டிப்ளோமா
**Course Length - Six Month**
22
SEPT. 2011 TO FEBRUARY 2012
*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**
- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011


# மரண அறிவித்தல்

## அமரர் சின்னத்தம்பி கணேசமூர்த்தி (J.P)

(ஓய்வு நிலை அதிபர்)



அல்வாய் வடமேற்கு மாறாம்புலத்தை பிறப்பிடமாகவும் வாழிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணேசமூர்த்தி 18.09.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராமுப்பிள்ளை தம்பதியினரின் இளைய மகனும், புதியாக்குட்டி-செல்வம் அவர்களின் மருமகனும், காலஞ்சென்றவர்களான மகேசன்-வள்ளிப்பிள்ளை, இளையதம்பி-பொன்னம்மா, சின்னத்தம்பி, ஏகாம்பரம், சிவஞானபண்டிதர்-செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், சுபத்திரா (ஆசிரியை-யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை), சந்திரிக்கா (ஜேர்மனி), சுரேந்திரன் (ஜேர்மனி), ரவீந்திரன் (பொறியியலாளர்-கனடா), தவீந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-தொழிற்றிணைக்களம்- திருகோணமலை), பிறேமினி (ஆசிரியை, பாணந்துறை முஸ்லிம் மகா வித்தியாலம்-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராஜலிங்கம் (நிர்வாக அலுவலர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு), பேரின்பதாஸ் (ஜேர்மனி), நிர்மலா (ஜேர்மனி), துளசி (கனடா), நிசாந்தினி (ஆசிரியை, புனித சூசையப்பர் கல்லூரி-திருகோணமலை), மகாவலிராஜன் (நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர், கல்வியமைச்சு -கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், மஞ்சரிக்கா, மீராஞ்சலி, ஸ்ரீராம், கீர்த்திகா, பிருந்தா, சஜிந்திரன், இலக்கியா, அர்வின், ஆதிரன், சுரபிகா, கேசிகா, கிருஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமைக்கிரியைகள் 21.09.2011 புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

திருவடி நிழல்
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.
தொ.பே: 021 226 4306

தகவல்:-
குடும்பத்தினர்.

(சி-4501)


# BCBS CAMPUS
298B, R.A. De Mel Mawatha
Colombo-3.

**Spot Admission With Representatives 21st September 2011 (2.00pm- 5.00pm) At Jaffna**

- சாதாரணதரசித்தி (O/Level ) தகைமை இல்லாமலும் IELTS தகைமை இல்லாமலும் UK Visa களை பெறவும்,
- UK இல் கல்வி & வேலைவாய்ப்பு இரண்டையும் ஒரே நேரத்தில் தொடரவும்.

Dgree & MBA Programs From UK Universities to Complete While Sri Lanka migration to Canada, Australia & Newzealand
France Visa Can be Arranged

அழையுங்கள்:-
077 2227393-Sharmi (தமிழ்மொழி மூலம்)
077 2008110-Mahesh (ஆங்கில மொழி மூலம்)

(C-4502)

# பொதுநலவாய அமைப்பில் இலங்கையை இடைநிறுத்துமாறு கிறீன்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இலங்கை வகித்துவரும் அங்கத்துவத்தை இடைநிறுத்தவேண்டுமென அவுஸ்திரேலியாவின் கிறீன்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்படும் வரையில் உறுப்புரிமை இடை நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் உறுப்புரிமையை இடை நிறுத்துவது தொடர்பிலான பிரசார நடவடிக்கைகளை கிறீன் கட்சி ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் பொதுநலவாய நாடுகள் அமர்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், நீதித்துறையைச் சார்ந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் பங்களிப்புடன் அவுஸ்திரேலிய பாராளுமன்றில் கிறீன்கட்சி வட்ட மேசை மாநாடு நடத்தவுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சாட்சியங்களைத் திரட்டும் நோக்கில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

சரியான ஆதாரங்கள் திரட்டப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டால் இலங்கையின் சார்பில் பேர்த் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு விசா மறுக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக கிறீன்கட்சி செனட்டர் லீ ரியான்னான் தெரிவித்துள்ளார்.

கனடாவிலும் இதேபோன்றதொரு எதிர்ப்பலை உருவாகியுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்தக்குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டுமென கடந்த ஜூலை மாதம் கிறீன்கட்சி முன்வைத்த யோசனைத் திட்டத்திற்கு அமோக ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உறுப்பு நாடு என்ற காரணத்தினால் குற்றச் செயல்களில் ஈடுபடுவதனை அனுமதிக்கமுடியாது என நியூ சவுத் வேல்ஸின் முன்னாள் சட்டமா அதிபர் ஜோன் டொவுட் தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டபோது பொது நலவாய நாடு உறுப்புரிமை மறுக்கப்பட்டதுடன் கடந்த 2007 ஆம் ஆண்டு பிஜி தீவுகளின் உறுப்புரிமையையும் இவ்வாறு இடை நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

கைத்தொலைபேசியைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் 4 நபர்கள் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-3)

# கடலரிக்கும் பகுதிகளில் செயற்கை கரைகளை அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

கடலரிப்புக் காணப்படும் பகுதிகளில் செயற்கையான கடற்கரைகளை அமைப்பதற்கு கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்கீழ் 100 மீற்றர் ஆழத்தில் கடல் மண் பெறப்பட்டு செயற்கையான முறையில் கடற்கரை அமைக்கப்படவுள்ளதாக திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் காமினி ஹேவகே குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் கடலரிப்பைத் தடுப்பதற்கு கல் தடுப்புகள் அமைக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் சுற்றுலாத்துறைக்கும் பாதிப்பு ஏற்பட்ட காரணத்தினால் புதிய திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாரவில, வென்னப்புவ கரையோரங்களில் கடலரிப்பு அபாயம் நிலவுகின்றதுடன் இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக சிலாபம் கடற்கரை செயற்கையான முறையில் அமைக்கப்படவுள்ளதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (4-2)

# தரம் குறைந்த சீமெந்து இறக்குமதியென நிரூபிக்கப்பட்டால் உடன் பதவி விலகுவேன்

## அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவிப்பு

இலங்கைக்கு தரம் குறைவான சீமெந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக எவரேனும் நிரூபித்தால் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் பதவி விலகுவதாக கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சிலாபம் மாதம்மை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவு சங்கம் ஒரு மூடையேனும் தரம் குறைந்த சீமெந்தை இறக்குமதி செய்யவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்துகள் உரிய தர நிர்ணயங்களை நிவர்த்திக்கவில்லை எனவும் அவற்றுக்கு தரச் சான்று வழங்க முடியாது எனவும் இலங்கை தர நிர்ணய சபை முன்னர் அறிவித்திருந்தது.

எனினும் பின்னர் குறித்த சீமெந்து வகைகளுக்கு தர முத்திரை வழங்கப்பட்டதுடன் சந்தையில் அவை தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (4-2)

## ஆயிரம் பாடசாலை தரமுயர்த்தலில்

# 400 பாடசாலைகளை தரம் உயர்த்துவதில் நெருக்கடி நிலை

## கல்வியமைச்சு தகவல்

(கொழும்பு)

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் 400 பாடசாலைகளை தரம் உயர்த்துவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.

தொடர்ந்து இவ்விடயம் குறித்து அவர் தெரிவிக்கையில்,

இடைநிலை பாடசாலையை அபிவிருத்திசெய்யும் செயற்றிட்டத்திற்கு நாடு பூராகவும் 1000 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 400 பாடசாலைகளிலிருந்து நீக்கிக்கொள்வதற்கு பெற்றோர்களும் பழைய மாணவர் சங்கங்களும் எதிர்புத் தெரிவித்து வருகின்றன. ஆனால், ஏனைய 600 பாடசாலைகளில் இச்சிக்கல் காணப்படவில்லை என்றார்.

இந்த இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும். பாடசாலைகளுக்கான ஆசிரியர்களை முன்னதாகவே நியமிக்க திட்டமிட்டுள்ளோம்.

முடியுமானவரை அந்த 400 பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இப்பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் 3 ஆயிரம் பேரை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (4-2)

## பரிசளிப்பு விழா

(கல்வயல்)

யாழ். சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் பாடசாலை அதிபர் க. அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் பேராசிரியர் கு.மிகுந்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு இந்நிகழ்வில் பரிசில்களை யாழ். பல்கலைக்கழக விவசாயப் பொறியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி துஷியந்தி மிகுந்தன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-12-31)

# ஜெயராஜ் கொலைக்கு உதவிய சந்தேகத்தின் பேரில் ஒருவருக்கு எதிராக குற்றப்பத்திரம்

(கொழும்பு)

பெருந்தெருக்கள் முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயை கொலை செய்வதற்காக தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்துக்கு உதவிகளைச் செய்ததாகவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் சந்தேகிக்கப்படும் ஒருவர் மீது சட்டமா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த விடயம் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ.எம்.தில்லைநாதன் மாகாண சிறைச்சாலையில் உள்ள சந்தேக நபரான சண்முகராஜா சுரேஷ்குமார் அல்லது குட்டி என்பவரை சிறை அதிகாரிகள் நீதிமன்றுக்கு அழைத்து வரவில்லை என நீதிபதியிடம் கூறினார்.

இதைத் தொடர்ந்து மகர சிறைகள் அத்தியட்சகர் எதிர்வரும் ஒக்டோபர் 19 இல் சந்தேக நபரை நீதிமன்றத்துக்கு கொண்டு வர வேண்டும் என நீதிபதி பணித்தார்.

தமிழீழ விடுதலை புலி இயக்கத்தவரான முத்தையா நரேந்திரன் அல்லது வெள்ளைத் தம்பி மொகமட் என்பவருக்கு கவுடான தெகிவளையில் மார்ச் 10 இலிருந்து ஏப்ரல் 5 2005 வரை தங்குமிட வசதியை ஏற்படுத்திக் கொடுத்ததாக சட்டமா அதிபர் சந்தேக நபர் மீது குற்றம் சாட்டியுள்ளார். (4-2)

# தனியார் பேருந்தில் சீ4 ரக வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

மொனராகலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேருந்தில் சீ 4 ரக வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

தனியாருக்கு சொந்தமான பேருந்து ஒன்றிலிருந்து இந்த வெடிபொருட்களை மொனராகலைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பொலிஸார் நடத்திய சோதனைகளின் போது வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. 815 கிராம் எடையுடைய வெடிபொருட்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

சாரதியின் ஆசனத்திற்கு அருகாமையில் நுட்பமான முறையில் வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. சம்பவம் தொடர்பில் பேருந்தின் சாரதியும் உதவியாளரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (4-2)



வல்வை சிவகுரு வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கைக்கான யுனிசெப் வதிவிட பிரதிநிதி Rexahiaaiani நாடாவை வெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- கரவெட்டி செய்தியாளர்)

# தூக்கு மேடையிலிருந்து காப்பாற்ற துடிப்பது கொலையாளிகளை அல்ல...

**கொலைகுற்றம் சாட்டப்பட்ட மூன்று தமிழர்களின் உயிர்காப்பு, முல்லைப் பெரியாறுக்காக உண்ணாவிரதம், தூத்துக்குடி ஸ்டெர் லைட்வழக்கு, போர்க்குற்ற விசாரணை என நித்தம் நித்தம் யுத்தத்தை எதிர்கொள்ளும் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ ஜூனியர் விகடனுக்கு அளித்த செவ்வி பிரசுரமாகிறது.**

*ஜெயலலிதா தனது 100 நாட்கள் ஆட்சியைச் சாதனை விழாவாகக் கொண்டாடி விட்டார். இந்த 100 நாட்கள் பற்றிய உங்களது கருத்து என்ன?*

இலங்கையைப் போர்க் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியது. இலங்கை மீது பொருளாதாரத் தடைவேண்டும் எனக் கேட்டது. கச்சதீவை மீட்க வேண்டும் என்றது. மூன்று தமிழர்களின் உயிர்காக்க தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தது என வரவேற்கத்தக்க பல்வேறு முயற்சிகளை முதலமைச்சர் இந்த 100 நாட்களில் செய்து காட்டிவிட்டார். ஆனால் சமச்சீர் கல்வி விவகாரத்தில் அவரது அணுகுமுறை தவறானது. ஒருமுறை உச்ச நீதிமன்றம் கண்டித்த பிறகும் தனது போக்கை மாற்றிக் கொள்ளாமல் மறுபடியும் டில்லிக்கு ஓடியது அவரது பிடிவாதக் குணத்தையே காட்டியது. இது சரியான ஜனநாயக அணுகுமுறை அல்ல!

பொதுவாகவே இலவசங்களை அறிவித்து ஆட்சியைத் தக்கவைப்பது சரியானது அல்ல. உழைப்பே உயர்வு தரும் என்று சொல்லி வளர்க்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தில் உழைக்கும் மனோநிலையைக் குறைக்கும் இத்தகைய இலவசத் திட்டங்களை முதலமைச்சர் குறைக்க வேண்டும். கருணாநிதி இத்தகைய திட்டங்களைக் கொண்டுவந்தபோது விமர்சித்த இன்றைய முதல்வரும் அதையே பின்பற்றுவது தவறானது. இத்தகைய திட்டங்களால்தான் தமிழகத்தில் வேலைக்கு ஆட்கள் கிடைக்காமல் பீகார் ஒடிஷாவில் இருந்து ஏராளமானவர்கள் இங்கு வேலைக்கு அழைத்து வரப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் எதிர்காலத்தையே நாசமாக்கும் டாஸ்மாக் மது விற்பனையை ஓர் அரசாங்கம் தனது சாதனையாகச் சொல்வது அருவருப்பானது. உழைக்கும் வர்க்கமான இளைய தலைமுறையின் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாத அக்கறையற்ற போக்கு எனக்குக் கவலையைத் தருகிறது.

*திருச்சி மேற்கு தேர்தலைப் புறக்கணிக்கும் ம.தி.மு.க. உள்ளாட்சித் தேர்தலில் பங்கேற்குமா?*

நிச்சயம் போட்டியிடுவோம்! ஊழலற்ற உண்மையான உள்ளாட்சி நிர்வாகத்துக்கு உறுதி அளிக்கும் ம.தி.மு.க என்ற முழக்கத்தோடு வரப் போகிறோம். அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கு நாங்கள் முயற்சிக்கவும் இல்லை. தி.மு.க.வுடன் கூட்டும் கிடையாது. எங்களை மட்டுமே நம்பி நாங்கள் இருக்கிறோம். பணபலம், அதிகார பலம், விளம்பர பலம் மூன்றுமே இல்லாமல் மக்களின் நம்பிக்கையைக் கடந்த ஐந்து மாதங்களில் அதிகமாகப் பெற்றுள்ளோம். ஊழல் கறைபடியாதவர்கள் என்ற தகுதி எங்களைத் திரும்பிப் பார்க்கவைக்கிறது. மாற்றுச் சக்தியாக ம.தி.மு.க.வரும். அதை இந்த உள்ளாட்சித் தேர்தல் சொல்லும்!

*ராஜீவ்காந்தியைக் கொன்ற கொலையாளிகளை ஆதரித்து நீங்கள் பேசுவது அந்தக் கொலையைவிடக் கொடூரமானது என்று காங்கிரஸ் கட்சியினர் கொந்தளிக்கிறார்களே!?*



ஸ்ரீ பெரும்புதூர் சம்பவத்தை நியாயப்படுத்தி நான் எந்த இடத்திலும் பேசவே இல்லை. மேலும் அந்தச் சம்பவத்துக்கும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கும் துளி அளவும் சம்பந்தம் இல்லை. நாங்கள் தூக்கு மேடையில் இருந்து காப்பாற்றத் துடிப்பது கொலையாளிகளை அல்ல... அப்பாவிகளை. அசைக்க முடியாத ஆதாரங்களைவைத்து அந்த வழக்கு போடப்படவில்லை. ஜோடிக்கப்பட்ட கதைகளை வைத்து புனையப்பட்ட நாடகம் இது.

ஒரே ஓர் உதாரணம் மட்டும் சொல்கிறேன். பற்றரி செல்களை வாங்கிக் கொடுத்ததாக பேரறிவாளன் மீது குற்றச்சாட்டு. பற்றரி செல் வாங்கினால் எந்தக் கடையிலாவது பில்கொடுப்பானா? அதுவும் 21 ஆண்டுகளுக்கு முன்னால் கொடுப்பானா? சரி, கொடுத்தனர் என்றே வைத்துக்கொள்ளுங்கள். மே மாதம் 21ஆம் திகதிக்கு முன்னால் தரப்பட்ட அந்த சிட்டையில் ஜூன் மாதம் 10ஆம் திகதிவரை யாராவது சட்டைப் பையில் வைத்திருந்திருப்பாரா? கொலைச் சதியில் உடந்தையாக இருந்தவர் என்றால், அவருக்கு இதுவே முக்கிய ஆதாரமாக மாறும் எனத் தெரியாதா? கிழித்துப்போட்டு இருக்க மாட்டாரா? பொலிஸ் கைது செய்யவரும் போது எடுக்க வசதியாக மேல்சட்டையில் வைத்து இருப்பாரா? இப்படி எத்தனையோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகலாம். இப்படிப்பட்ட அப்பாவிகளுக்காகத்தான் பேசுகிறோம். இவர்களுக்குக் கொலையிலும் சம்பந்தம் இல்லை. கொலைச் சதியிலும் பங்கேற்பு இல்லை. இதுதான் உண்மை!

இவர்களைத் தூக்கில் போடக் கூடாது என்று நாங்கள் சொல்வது கொலைக்கான ஆதரவு என்றால் இவர்களைத் தூக்கில் போடக் கூடாது என்று சோனியா சென்னாரே, அவர் மீதும் இதையே சொல்வார்களா? எனக்கோ, என்னுடைய குடும்பத்துக்கோ, எனது பிள்ளைகளுக்கோ, இவர்கள் நால்வரையும் தூக்கில் போட வேண்டும் என்ற எண்ணம் துளியும் இல்லை என்று 99ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதியிடம் சோனியா சொன்னதைத்தான் நாங்கள் சொல்கிறோம்!

நளினி, பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய நால்வருக்கும் தூக்குத் தண்டனையை உறுதிப்படுத்திய உச்ச நீதிமன்ற நீதிபதி கே.டி.தாமஸ் தூக்குத் தண்டனைக்கு எதிராக இப்போது கருத்துச் சொல்லி இருக்கிறார். நீதிபதி சொல்வதைத்தான் நாங்கள் சொல்கிறோம். பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் வழக்கை நடத்தி சி.பி.ஐ சிறப்புப் புலனாய்வுக் குழுவைக் கண்காணித்த அதிகாரி வி.ஆர்.கார்த்திகேயன் அவரும் தூக்குத் தண்டனை அவசியம் இல்லை என்கிறார். கார்த்திகேயன் சொல்வதைத்தான் நாங்கள் சொல்கிறோம். சோனியா உள்ளிட்ட இவர்களையும் கொலைகாரர்கள் என்பார்களா காங்கிரஸ்காரர்கள்?

ஸ்ரீ பெரும்புதூர் தாக்குதலில் இறந்த ராஜீவ் நீங்கலான 16 பேரின் குடும்பத்தினர் உண்ணாவிரதம் இருந்துள்ளனர். *மூன்று பேரையும் தூக்கிலிட்டே தீர வேண்டும் என்று அவர்கள் சொல்வதற்கு உங்கள் பதில் என்ன?*

அவர்களது துயரத்தில் நானும் பங்கேற்கிறேன். போன உயர் திரும்பி வரப்போவது இல்லை என்று அவர்கள் பேட்டி அளித்து இருப்பதையும் நான் பார்த்தேன். அவர்களைத் தங்களது அரசியல் சுயஇலாபங்களுக்காக காங்கிரஸ்காரர்கள் தூண்டிவிட்டுக் குளிர்காயப் பார்க்கிறார்கள். உச்சநீதிமன்றம் வழங்கிய தனது தீர்ப்பில் இது தனிப்பட்ட ஒரு நபரைக் கொலை செய்ய நடந்த தாக்குதல்தான். ஏனைய 16 பேர் இறந்தது தற்செயலானது. எனவே இதை 17 பேர் இறப்புக்குக் காரணமான கொலையாகக் கருதமுடியாது. அரசுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கமும் இல்லை என்று கூறிஉள்ளது. இதை காங்கிரஸ்காரர்கள் படிக்க வேண்டும்.

மும்பையில் 93 பேர் கொலையான சம்பவத்துக்குக் காரணமானவராகச் சொல்லப்படும் அபுசலீம் போர்த்துக்கல் நாட்டில் மறைந்து இருந்தார். இந்தியா அவரை ஒப்படைக்கச் சொன்னது. உங்கள் நாட்டிடம் ஒப்படைத்தால் அவரைத் தூக்கிலிட்டுக் கொல்வீர்கள் என்று தர மறுத்தார்கள். நாங்கள் தூக்கில் போட மாட்டோம் என்று போர்த்துக்கல் அரசுக்கு வாக்குறுதி கொடுத்தது இந்தியா. அது எந்த அடிப்படையில்?

*பாகிஸ்தான் அரசு சரப்ஜித் சிங்கைத் தூக்கிலிடக் கூடாது என்று எந்த அடிப்படையில் இந்தியா சொல்கிறது?*

இன்றைக்கு நீலிக்கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ்காரர்கள் இலட்சக் கணக்கான தமிழர்கள் ஈழத்தில் கொல்லப்பட்டபோது ஒரு நிமிடம் கண்ணீர் சிந்தியது உண்டா? இலங்கைப் படுகொலைகளுக்கு காங்கிரஸ் அரசும் பதில் சொல்ல வேண்டும் என்ற நிர்ப்பந்தம் நெருங்கிக்கொண்டு இருப்பதால் அதைத் திசை திருப்ப மூன்று தமிழர்களைத் தூக்கிலிடத் திட்டமிட்டார்கள். அது நடக்காது.

மக்கள் மன்றம் இதை ஏற்காது என்பதற்கு ஆதரவாக எத்தனையோ போராட்டங்கள் நடந்தன. இதை ஏற்று சட்டமன்றமும் தீர்மானம் நிறைவேற்றியதன் மூலம் மகத்தான சாதனையை முதல்வர் செய்துகாட்டிவிட்டார். இனி இருப்பது நீதிமன்றம் மட்டும்தான். ஏராளமான முன்னுதாரணத் தீர்ப்புகளைவைத்து சட்டரீதியான வாதங்களிலும் வென்று எடுப்போம். தூக்குமரம் முறியும் இவர்கள் மூவருக்காக மட்டும் அல்ல.... நிரந்தரமாகவே முறிய வேண்டும்!

**ஜூனியர் விகடன்**

ப.திருமாவேலன்

# இராணுவத்தின் பங்களிப்புடன் மக்களுக்கு உதவி உபகரணங்கள்

(கிளிநொச்சி)

வெற்றிக்கான மகிழ்ச்சி[illegible]ம் உதவித்திட்டத்தின் கீழ் இராணுவத்தினரின் பங்களிப்புடன் கிளிநொச்சி வாழ் மக்களுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாங்குளம், பஞ்சிகாமம் குளம், ஒலுமடு, அம்பாள் நகர், அம்பகாமம் பிரதேசங்களைச் சேர்ந்த 210 குடும்ப அங்கத்தவர்களுக்கு 210 சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு 2 இலட்சம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்திய உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிறிகேடியர் ஹறின் பெரேரா, குணஜய சத்துட்ட பதனம சார்பில் குஷேன் குணசேகர ஆகியோருடன் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (4-2)

# அரசாங்கத்தின் நிதிகள் மக்களின் மேம்பாட்டிற்கு சென்றடைய வேண்டும்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார் மாவட்டத்தின் சகல துறைகளையும் அபிவிருத்தி செய்து மக்களின் வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்க அரசாங்கம் செயற்படுவதாக வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார் அரசாங்க அதிபர் பணிமனையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே மேற்கண்டவாறுகூறியுள்ளார்.

மன்னார் மாவட்டம் தற்போது அபிவிருத்திகளை காண ஆரம்பித்துள்ளது. இதற்கு ஜனாதிபதி மஹிந்த தான் காரணமானவர். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் இன்று வடமாகாணம் புதுப்பொலிவு பெற ஆரம்பித்துள்ளது.

எமது மக்களின் வாழ்வாதார மேம்பாடுகளை முன்னெடுக்க எடுக்கப்படும் திட்டங்களை எவ்வித பாகுபாடுகளுமின்றி செயற்படுத்துவது அரச அதிகாரிகளின் கடமையாகும். எமக்கிடையில் பிரதேசவாதங்கள் இல்லை. எமது மாவட்டம், எமது மக்கள் என்ற உணர்வு தான் இருக்கின்றது. சில திணைக்களங்களின் செயற்பாடுகள் குறித்து மக்கள் எம்மிடம் முறைப்பாடுகளை தெரிவிக்கின்றனர். அதனை ஆராயவேண்டியுள்ளது. அரசாங்கத்தின் நிதியானது மக்களது மேம்பாடுகளுக்கு சென்றடைய வேண்டு அதனை அதிகாரிகள் விரும்புகின்றதற்கு பயன்படுத்த முடியாது என அமைச்சர் றிசாத் பதியுதீன் கூறினார்.

விவசாயம், சுகாதாரம், கல்வி, மின்சாரம், குடிநீர், பாதைகள், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து தொடர்பாடல், வர்த்தகம் மற்றும் கைத்தொழில், வீடமைப்பு திட்டங்கள் குறித்து இங்கு ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹுனைஸ்பாருக், சிவசக்திஆனந்தன், வினோநோதராதலிங்கம், முத்தலிபாவா பாருக் உட்பட திணைக்களங்களின் தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர். (4-2)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் சேவைகள்

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்விற்குமான செயற்றிட்டத்தினால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் கிராம சேவையாளர் பிரிவுகளான மணவாளன், பட்டமுறிப்பு, மாங்குளம், தச்சடம்பன், ஒலுமடு, அம்பகாமம் மக்களுக் கான நடமாடும் சேவை ஒன்றினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துடன் இணைந்து நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.15 மணிவரை கரிப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இச்சேவையில் ஒட்டுசுட்டான்பிரதேச செயலகம் , இலங்கை மனித உரிமை ஆணைக்குழு , பதிவாளர் நாயகம் திணைக்களம் , சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை , சமூக சேவைகள் திணைக்களம் , சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பொலிஸ் நிலையம் ,மாங்குளம் , பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு , கமநலசேவைகள் அபிவிருத்தித் திணைக்களம் , விவசாயத் திணைக்களம் , சிறுவர் பராமரிப்பு திணைக்களம் , மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு , பிரதேச சபை புதுக்குடியிருப்பு ஆகிய நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கவுள்ளன.

எனவே இப்பகுதி மக்கள் இந் நடமாடும் சேவையில் பங்குபற்றுவதன்மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியுமென முல்லைத்தீவு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பிராந்திய நிகழ்ச்சித்திட்ட அதிகாரி இ.அமலன் கேட்டுக் கொண்டுள்ளார். (4-12)

# இசை இறுவெட்டு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நவராத்திரி விரத காலத்தினை முன்னிட்டு சுதுமலை அம்பாள் விளையாட்டுக்கழக சமய கலாசாரப் பிரிவினர் வழங்கும் ''அம்பிகை அருளாலே...''பாகம் 2 இசை இறுவெட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளது. (4-2)

# கடல் வாழ் தாவரங்களால் முருகைக்கல்லிற்கு பாதிப்பு

கடற்தாவரங்கள் காரணமாக நாட்டின் முருகைக்கற்பாறை கட்டமைப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சமுத்திர ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக கடல் பாசி வகைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக றுகுணு பல்கலைக்கழகத்தின் ஆழ்கடல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் பேராசிரியர் பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

கற்பிட்டி, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் தென்பகுதி கடற்பகுதிகளில் தற்போது வியாபார நோக்கில் கடல்தாவர செய்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக முன்னெடுக்க வேண்டிய தீர்மானங்கள் தொடர்பிலான மாநா டொன்றும் அண்மையில் இராமேஸ்வரத்தில் இடம் பெற்றதாக அவர் குறிப்பிட்டார். (4-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## குங்குமப் பூ

**Botanical Name: Crocus Sativus**
**Family: Iridaceae**
**English: saffron**

இது ஓர்வகைச்செடியாகும். இச் செடியின் பூவின் மூன்று சூலகமூடிகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் சூல்வித்திலையில் நுனியில் உள்ளன. இப் பூவின் உலர்த்தப்பட்ட சூலகமூடிகளும் சூல்தண்டுகளும் குங்குமப்பூ என்று அழைக்கப்படுகின்றது.

இது இலையுதிர் காலத்தில் பூக்கின்ற பல்லாண்டுத் தாவரமாகும். கோடைகால தூக்கத்திற்குபின்னர் இளவேனில் காலத்தில் இந்தத் தாவரத்தில் 5 முதல் 11 வரையிலான குறுகலான மற்றும் கிட்டத்தட்ட செங்குத்தான பச்சை இலைகள் துளிர்க்கின்றன. ஒவ்வொரு இலையும் 40 செ.மீ வரையிலான நீளம் கொண்டதாக இருக்கும். இலையுதிர் காலத்தில் ஊதாநிற மொட்டுக்கள் தோன்றுகின்றன. இவை ஐப்பசி மாதத்தில் மிகச் சிறந்த நிறமுடைய பூக்களை உருவாக்குகின்றன. அவற்றின் நிறம் மென்மையான ஊதாவிலிருந்து அடர்த்தியான மற்றும் பல வரிகள் அமைந்த சாம்பல் கலந்த மென்மையான ஊதாவரை வேறுபடுகின்றன. பூக்கும் காலத்தில் இந்த தாவரத்தின் சராசரி உயரம் 30 சென்றி மீற்றருக்கும் குறைவாக உள்ளது. ஒவ்வொரு பூவிலிருந்தும் மூன்று நீட்சிகளை உடைய சூலகத்தண்டுகள் உருவாகின்றன். அவை ஒவ்வொன்றின் முனையிலும் 25 தொடக்கம் 30 மி.மீ குறுக்களவுள்ள பிரகாசமான கருஞ்சிவப்பு நிறமுள்ள சூலக மூடிகள் காணப்படுகின்றன.

**இனவிருத்தியும் பரம்பலும்**

இதன் தாயகம் மத்திய ஆசியாவாகும். இவற்றின் ஊதாநிறப்பூக்கள் வளம்மிக்க விதைகளை உருவாக்குவதில்லை. இவற்றின் இனப்பெருக்கத்திற்கு மனித உதவி தேவைப்படுகின்றது.



அதற்கு நிலத்திற்கு கீழே இருக்கும் குமிழ் போன்ற மாச்சத்து சேமிக்கும் தண்டுக் கிழங்குகளைத் தோண்டி எடுத்து சிறுதுண்டுகளாக உடைத்து திரும்பவும் நடவேண்டும். இவ்வாறு நடப்படும் ஒரு தண்டுக்கிழங்கு ஒரு பருவம்வரை வாழும்.

இவை ஒவ்வொன்றும் இம் முறையில் பிரித்து நடுவதன் மூலம் பத்து வரையிலான புதிய தாவரங்களை உருவாக்கும். இந்த தண்டுக்கிழங்குகள் சிறிய பழுப்பு நிறமான 4.5 செ.மீ வரையிலான விட்டத்தைக் கொண்ட சிறுகோளவடிவம் கொண்டவையாகும். இவை இணையான அமைப்பு கொண்ட நார்களாலான அடர்த்தியான காப்புறையை கொண்டிருக்கும்.

இந்தியாவில் இமயமலையில் காஷ்மீரில் 7 ஆயிரம் அடி உயரப்பகுதிகளில் குங்குமப்பூவின் தண்டடிக் கிழங்குகளை (corm) 20 செ.மீ இடை வெளிவிட்டு நீண்ட வரிசைகளில் ஆடி மாதம் நடுகின்றார்கள்.

பூக்களை பறிக்கச் செய்ய வசதியாக நடைபாதைக்கு இடைவெளிவிடுகிறார்கள் செடிகள் வளர்ந்து மலர்கள் பூத்த பின்பு வசந்தகாலத்தில் (கார்த்திகை-மார்கழி) மலர்களை பறித்து சூலகத்தண்டு சூலகமூடிகளை சேகரிக்கிறார்கள்.

காலையில் மலரும் பூக்கள் மாலைக்குள் வாடத் தொடங்கிவிடுகின்றன. எனவே அறுவடையை மிகவேகமாகச் செய்ய வேண்டியது அவசியமாகும்.75 ஆயிரம் மலர்கள் 500 கிராம் குங்குமப்பூவைபெற தேவைப் படுகின்றது.

**உலர்த்தல், களஞ்சியப்படுத்தல்**

பூக்களில் நறுமணஎண்ணெய் காணப்படுவதால் சூலகத்தண்டு மற்றும் சூலகமூடிகளை அரை அடிவிட்டமுள்ள கம்பிவலைப் பெட்டியிலிட்டுச் சிறிய அளவு வெப்பம் வருகின்ற அடுப்புகளின் மீது கம்பிவலை பெட்டிகளை வைத்து 30 முதல் 45 நிமிடங்கள் வரை உலர்த்தவேண்டும்.

உலர்த்தும் போது ஒவ்வொரு 20 நிமிடமும் சூலகமூடிகளை கிளறிவிட வேண்டும். இந்த உலர்ந்த சூலகத்தண்டு சூலகமூடி குங்குமப்பூ என அழைக்கப்படுகிறது. உலர்ந்த மலரின் பாகங்களை பிற இடங்களிற்கு அனுப்புவதற்குப் பொதி செய்யும் போது பொதி நெருக்கமாகவும் சூரிய ஒளி படாதவாறும் பொதிசெய்தல் வேண்டும்.

**வேதியற் சேர்மானம்**

குங்குமப்பூவில் எளிதில் ஆவியாகின்ற நறுமணம் தருகின்ற சேர்மானங்கள் 150 இற்கு அதிகமாக உண்டு. இதில் பல ஆவியாகாத செயல்மிகு கூறுகளும் உண்டு. இவற்றில் சியாக்காந்தின் (Zeaxanthin) லைக்கோப்பீன்(Lycopene)மற்றும் பீட்டா கரோட்டின்கள் ஆகிய உள்ளன. குங்குமப் பூவின் சுவைக்கு கசப்பான குளுக்கோசைட்டு பிக்ரோகுரோசினே காரணமாகும். சிவப்பு நிறமுள்ள சியாக்காந்தின் மனித விழித்திரையில் இயற்கையாகவே காணப்படுகின்ற ஒரு கரோட்டின் வகையின் நிறப்பொருள்களில் ஒன்று.

அறுவடைக்கு பின்னர் குங்குமப்பூவை உலர்த்தும் போது வெப்பத்தினாலும் நொதியச் செயற்பாட்டாலும் பிக்ரோகு ரோசின் பிரிந்து டி. குளுக்கோஸ் மற்றும் ஒரு கட்டற்ற சாஃப்ரானல் மூலக்கூறும் உருவாகின்றது.

எளிதில் ஆவியாகும் சாஃப்ரானல் குங்குமப்பூவின் தனித்துவமான நறுமணத்திற்கு காரணமாகும். உலர்ந்த குங்குமப்பூ அடிக்கடி மாறும் பி.எச் அளவுகளால் அதிகம் பாதிக்கப்படும் தன்மை கொண்டது. ஒளி மற்றும் ஒட்சிஜனேற்ற காரணிகள் இருக்கும் போது வேதியல் ரீதியாக விரைவாக பிரிகை அடைகின்றது.

ஆகவே வளிமண்டல ஒட்சிசனுடனான தொடர்பை குறைக்கும் பொருட்டு உலர்ந்த குங்குமப்பூவை காற்றுப்புகாத கொள்கலன்களில் சேமிக்க வேண்டியது கட்டாயமாகும். குங்குமப்பூ ஓரளவு வெப்பத்தை தாங்கக் கூடியதாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# மற்றொரு கோணம்

## முழு உலகமும் உங்கள் இரக்கத்தன்மை மற்றும் புரிந்துகொள்ளுதல் எனும் குடையின் கீழ் வாழ முடியும்



ஆன்மீகம் 47

**ஏதாவது ஒரு ஆசிரமத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகச் சொன்னால் பலர் விசித்திரமா கப் பார்ப்பது ஏன்?**

இந்தியாவில் நீங்கள் யாரிட மாவது, "நான் ஆசிரமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறினால், "ஏன்? உங்கள் வாழ்ககையில் அப்படி என்ன தவறு நேர்ந்துவிட்டது?" என்று தான் கேட்பார்கள். உண்மையில் ஏதேனும் தவறு நேர்ந்தபிறகே



ஆசிரமத்துக்குப் போவீர்கள் என்றே அவர்கள் நம்புகிறார்கள். ஏனென்றால் அனேக மக்களின் புத்திசாலித்தனம் அப்படிப்பட் டதுதான். அவர்கள் எதிர்காலத் தில் உபயோகிக்கப் போவதாக நினைத்துக்கொண்டு, தங்கள் மூளையைக் குளிர்பதனப்படுத்தி வைத்துள்ளனர். அவர்களுடைய வாழ்க்கையில் உண்மையிலேயே ஏதேனும் தவறாகப்போனால்தான் அவர்கள் அனைத்தையும் கடந்து சிந்திக்கிறார்கள். அதுவரை ஏதா வது தவறாகப்போனால்கூட அடுத்த பிறவியில் அதைவிட மேலான வாழ்க்கையை வேண்டித்தான் அவர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

நீங்கள் எவருடைய இரக்கத்தையும் சார்ந்தி தலையும் சார்ந்தி ருக்க வேண்டிய தில்லை. இந்த முழு உலகமுமே உங்களின் இரக்கத் தன்மை மற்றும் புரிந்து கொள்ளுதல் எனும் குடையின் கீழ் வாழ முடியும். உலகம் உங் களின் இரக்கத் தன்மை மற்றும் புரிந்துகொள் ளுதலின் கீழ் வாழும் விதமாக நீங்கள் மேல் எழும்பி நில்லுங்கள். நான் அதனைக் காண விரும்புகிறேன். உங்களுக்கு தன்மானம் என்று ஏதாவது இருந் தால் நீங்கள் அப்படித்தானே வாழ வேண்டும்?

**ஒரு நாள் அன்பாக இருக்கி றேன் இன்னொருநாள் வருத்த மாக இருக்கிறேன் இது ஏன்?**

இத்தனை நாட்களாக உங்கள் உணர்ச்சிகள், உங்களின் எண்ணங் கள் உங்களுடைய பிரச்சினைகள் எல்லாமே யாரோ ஒருவருடன் சம் பந்தப்பட்டவை என்றுதான் நீங்கள் நினைத் திருக்கிறீர்கள். அது யாரு டனும் சம்பந்தப்படவில்லை என்று நீங்கள் உணரத் தொடங்கியிருப்பது நல்லது தான். அது உங்களுடைய பைத்தியக் காரத்தனம்தான். இதை உணர்ந்து கொள்ள நிறைய மக்கள் தன் முழு ஆயுட்காலத்தையும் எடுத் துக் கொள்கின்றனர். அவர்களுக்கு 70 வயது ஆகியிருந்தாலும் அவர்களு டைய உணர்ச்சிகளும் எண்ணங் களும் மற்றவர்களுடன் சம்பந்தப் பட்டவை என்றுதான் நினைக்கி றார்கள். அவர்களுக்குள்தான் அவர்களது அனுபவத்தின் இருப் பிடம் உள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. உங்கள் அனுபவத்தின் இருப்பிடம் உங்க ளுக்குள்ளேதான் இல்லையா? இந்தப் பைத்தியக்காரத்தனம் என்பது உங்களுடையது என்றும் அதற்கும் வேறு எவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை யும் நீங்கள் உணரத்தொடங்கிவிட் டால், பிறகு அதற்கான தீர்வைக் காண்பீர்கள் என நான் எண்ணுகி றேன். உலகில் ஒரே யொரு பிரச்சினைதான் உள்ளது. அது நீங்கள் தான் என்று நான் பல முறை கூறியுள்ளேன். இந்த ஒரு பிரச்சினையை நீங்கள் கரைத்து விட்டால், உலகில் உண்மையி லேயே வேறு எந்தப் பிரச்சினையு மில்லை.

குறைந்த பட்சம், பிரச்சினை என்னவென்று தெரியாத போது அதற்கான தீர்வு கிடைக்காது. பிரச்சினையால் நீங்கள் துன்பம் அடைவீர்கள். இப்பொழுதாவது நீங்கள் பிரச்சினை என்னவென்று அறிந்து கொண்டீர்களே! அதற் கான தீர்வு வெகுதூரத்தில் இல்லை.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

---

# 01 கணினி யுனிக்கோட் (Unicode) தமிழ்மொழியில் ஏற்படுத்திய தாக்கங்கள்

**1.0 தலைப்பு விரிவாக்கம்**

**1.1 தமிழ்மொழி**

இருண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த இலக்கிய மரபைக்கொண்டுள்ள தமிழ் மொழி, தற்பொழுது வழக்கிலிருக்கும் ஒரு சில செம்மொழிகளில் ஒன்றாகும். ஒரு மொழியை, தாய்மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண் ணிக்கை அடிப்படையில் வரிசைப் படுத்தப்பட்ட மொழிகளின் பட்டியலில், தமிழ், பதினெட்டா வது இடத்தில் உள்ளது.

(1) தமிழ் மொழியைப்பற்றி நாம் எண்ணும் போதும், உரை யாடும் போதும் தமிழ் எழுத்துக்க ளின் வடிவம்தான் எம் மனதில் வந்து நிற்கும். மொழியியல் பற்றிய எண்ணங்களுக்கு உருக் கொடுப் பது இந்த எழுத்துருவங்கள்தான். தமிழ் எழுத்து முறைமை ஒலிப்பி யல் அடிப்படையிலானது. தற் போதைய தமிழ் எழுத்து முறை தமிழ் பிராமியில் இருந்து தோன்றி யது ஆகும்.

**1.2 ஓலைச்சுவடி, கல், அச்சு, காலம் ஏற்படுத்திய தாக்கங்கள்**

வரிவடிவத்திலும் மொழியி லும் காலத்துடன் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வரி வடிவத்தைப் பொறுத்தவரையில் தமிழ் பிராமி காலப்போக்கில் "வட்டெழுத்"தாக உருமாறியது.

"வட்டெழுத்து" ஓலைச் சுவடிக ளிலும், கல்லிலும் செதுக்குவதற் கேற்ப இருந்தது. பின்னர் வீரமா முனிவரின் அறிவுரைப்படி இரட் டைக் கொம்பு போன்ற மாற்றங்கள் செய்யப்பட்டன. 1977 எம்.ஜி.இரா மச்சந்திரன் ஆட்சியில், அச்சில் ஏறு வதை எளிமைப்படுத்தும் வகையில் பெரியாரால் பரிந்துரைக்கப்பட்ட ஆகார, மற்றும் ஐகார உயிர்மெய் யெழுத்துக்களில் சீர் திருத்தம் செய் யப்பட்டது. மொழி அடிப்படை யிலே சமஸ்கிருத ஒலிகள் குறிக் கப்பட முடியாது என்பதால் சமஸ் கிருத ஒலிகளை எழுதும் பொருட்டு சில கிரந்த எழுத்து முறை, கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தினர். தொல்காப்பிய காலத்தில் மொழி முதலெழுத்துக்கள் அல்லாத டா, யா போன்றன பிற்காலத்தில் மொழி முதலெழுத்துக்கள் ஆயின.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கவிதை"

**1.3 கணினி யுனிக்கோட்**

தற்காலத்தில் 95% இற்கு மேற் பட்ட அச்சுப்பதிப்பு வேலைகளுக்கு கணினி பணன்படுத்தப்படுகின்றது. அடிப்படையில் கணினிகள் எண் களுடன்தான் தொழிற்படுகின்றன. அவை எழுத்துக்களையும் பிறபடங் கள், ஒலி வடிவங்கள் போன்ற அனைத்துத் தகவல்களையும் எண் வடிவிலேயே சேமிக்கின்றன. யுனிக் கோட் எந்தஒரு மொழியிலும், எந்வோர் இயங்கு தளத்திலும், எந்த ஒரு நிரலிலும் ஒவ்வொரு எழுத்துக்கும் தனித்துவமான எண் ணொன்றை வழங்குகின்றது.

(2) இவ்வடிப்படையில் கணினி யுனிக்கோட் தமிழ் மொழியில் ஏற்படுத்திய தாக்கங்களை தொகுத்து நிரற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**2.0 யுனிக்கோட்**

**2.1 அறிமுகம்**

தொண்ணூறுகளுக்குப் பிறகு இணையம் என்பது ஆராய்ச்சி மையங்களையும், பல்கலைக் கழகங்களையும் தாண்டி சாதாரண மக்கள் பயன்பாட்டிற்கு வந்த பிறகு தான் ஆங்கில மல்லாத ஏனைய மொழிகளை கணினி வழி பரிமாறு வதில் உள்ள சிக்கல் வெளிப்பட் டது. இந்தச் சிக்கலுக்குக் காரணம் வெவ்வேறு குறியீட்டு முறைமை கள் தான். அதனால் ஒரு கணனி யில் இருக்கும் ஆவணங்களை வேறொரு கணனியில் படிக்க முற் படும் போது ஏகப்பட்ட குளறுபடி கள். இதனைத்தீர்க்க முன்னணிப் பன்னாட்டு நிறுவனங்களும், அரச பிரதிநிதிகளும் இன்ன பிற தனி நபர்களும் ஒன்று சேர்ந்து யுனிக் கோட் குழுமம் என்கிற கூட்ட மைப்பை உண்டாக்கினார்கள். அவர்கள் உலகிலுள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட மொழிகளின் எழுத்துக்களுக்கும் தனித் தன்மை யான எண்களை ஒதுக்கி அவை யாவையும் ஒரே தகுதரம் என்கிற குடையின் கீழ் கொண்டுவர முயற் சித்தனர். அதுவே தற்பொழுது இணையத்தில் பரவலாகப் பயன் படுத்தும் ஒருங்குறி குறியீட்டுத் தகுதரத்திற்கு வித்தாய் அமைந்தது.

**2.2 தமிழ் யுனிக்கோட்**

யுனிக்கோட்டில் எண் 2946 முதல் எண் 3071 வரை தமிழுக் காக (உரு1) இடம் ஒதுக்கப் பட்டுள்ளது. அந்நிலையில், எந்த மொழியைச் சேர்ந்தவராயினும் 2949 என்ற எண்ணை யுனிக்கோட்

கணினி விரிவுரையாளர் ஞா. பாலச்சந்திரன்

டில் எழுதினால் அது தமிழ் "அ" வாகவே கணினியில் வெளிப் படும். மேற் கூறியவாறு உலகம் முழுவதும் ஒரே குறியாக்கம் பயன்படுத்தப்பட்டால் செய்திப் பரிமாற் றத்தில் குழப்பம் ஏற்படாது.

(தொடரும்)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்




(அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்)

**அடுத்தவரை அனுசரித்தால் ஆதாயம் கூடும்!**

***நட்புக்காக கை கொடுக்கும் நல்ல உள்ளம் படைத்த கும்ப இராசி நேயர்களே!***

கடுமையாக உழைக்கக்கூடியவர்கள் நீங்கள். காற்றைப் போல் வேகமானவர்கள். குடும்ப வாழ்க்கையில் குதூகலம் கொஞ்சம் குறைவுதான். காரணம் இராசி நாதன் சனிபகவானாவார். எனவே எதையும் போராடிப் போராடியே பெற்றுக் கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம். நீங்கள் மற்றவர்களுக்கு செய்யும் உதவிகளுக்காக நன்றி கூட அவர்கள் சொல்ல மாட்டார்கள்.

கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக் கொள்ளும் பொழுது தான் உங்கள் முன்னேற்றம் கூடுகின்றது.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்கும் பொழுது அஷ்டமத்தில் மூன்று கிரகங்கள் சஞ்சரித்து மாதம் தொடங்குகின்றது. அதோடு புதனும் மாதத் தொடக்க நாளில் வந்திணைகின்றார். எனவே மனக்குழப்பம் உருவாகலாம். இனம் புரியாத கவலை மேலோங்கும். எதையும் மற்றவர்களிடம் அல்லது குடும்ப பெரியவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்வது நல்லது. கூட்டுமுயற்சிகளில் குந்தகம் ஏற்படலாம்.

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை உருவாகிறதே என்று கவலைப்படுவீர்கள்: என்ன இருந்தாலும் அஷ்டமத்துச்சனி விலகும் வரை பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. வரவு வந்த நிமிடமே செலவானாலும் ஆறுக்கு அதிபதி சந்திரன் உச்சம் பெற்று மாதம் தொடங்குவதால் கேட்ட இடத்தில் கடனுதவி கிடைக்கும். சந்திர, கேது சேர்க்கை இருப்பதால் முன்கோபம் அதிகரிக்கும்.

முன்கோபத்தின் விளைவாக உங்கள் முன்னேற்றங்கள் பாதிக்கலாம். நவராத்திரி விழாக் காலங்களில் நம்பிக்கையோடு அம்பிகையை வழிபாடு செய்யுங்கள். துன்பங்களில் இருந்து விடுதலை உங்களுக்கு கிடைக்கும்.

புதன் மாதத் தொடக்க நாளில் உச்சம் பெறுகிறார். அஷ்டமாதிபதி உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஐந்துக்கு அதிபதி அஷ்டமத்தில் உச்சம் பெறுவதால் பிள்ளைகள் வழியில் பெரும் செலவுகளும் சிக்கல்களும் உருவாகலாம். மாமன், மைத்துனர் வழியில் கருத்து வேறுபாடுகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அடுத்தவர்களை விமர்சிப்பதன் மூலம் அல்லல்கள் ஏற்படும். எனவே சனிக்கிழமைதோறும் விரதமிருந்து சனீஸ்வரரை வழிபட்டால் சஞ்சலங்களில் இருந்து விடுபட இயலும்.

ஒக்டோபர் 4 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். ஒக்டோபர் 5 ஆம் திகதி சுக்ரனும் அதோடு வந்திணைகிறார். ஒன்பதில் இணையும் புத-சுக்ர சேர்க்கையால் தந்தை வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும். பூர்வீக சொத்துக்களில் இலாபம் உண்டு. புதிய வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். விலகிய சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.

இம்மாதம் சனிக்கிழமைதோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். திருமால் வழிபாட்டையும் திருமகள் வழிபாட்டையும் கூடுதலாக மேற்கொண்டால் திரும்பிய பக்கமெல்லாம் வெற்றி கிடைக்கும்.

இம்மாதம் நீங்கள் சிந்தித்துச் செயற்படுவதன் மூலமே சிறப்புகளை காண இயலும். குடும்பச் செலவு கூடும்.வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். கட்டடப் பணியை தொடர முடியவில்லையே என்ற கவலை அதிகரிக்கும்.

சுபகாரியப் பேச்சுக்கள் விலகிப் போகலாம். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளிடம் அன்பு அதிகம் காட்டுங்கள். அவர்களின் போக்கில் விட்டுத் திரும்புவது நல்லது. துர்க்கை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவதோடு சர்ப்ப சாந்தியும் முறையாகச் செய்தால் சந்தோஷங்களைச் சந்திக்கலாம்.




(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

**சனி வழிபாடே சந்தோஷம் வழங்கும்!**

***எப்பொழுதும் முன்னேற்றச் சிந்தனையிலேயே முழுமையாக கவனத்தை செலுத்தும் மீன இராசி நேயர்களே!***

மற்றவர்களின் குறைகளைக் கண்டு கொள்ளாமல் நிறைகளை மட்டுமே எடுத்துக் கொள்வீர்கள். உண்மை, நேர்மை, உழைப்பு இவையே உங்கள் மூலதனமாகக் கொள்வதால் எதிரிகள் கூட சரணடைவார்கள். பதவிக்கு ஆசைப்படாமல் உதவிக்கு ஆசைப்படுவீர்கள். குடும்ப வாழ்க்கையில் அமைதியை கடைப்பிடிக்க வேண்டுமானால் உறவினர்களை நீங்கள் அனுசரித்து செல்லும் சூழ்நிலையே உருவாகும். சமயோசித புத்தி மிக்கவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிக்கு ஏழில் மூன்று கிரகங்கள் சஞ்சரித்து மாதம் தொடங்குகின்றது. அது மட்டுமல்ல மாதத்தின் தொடக்க நாளிலேயே புதனும் அதோடு இணைகிறார். 3,4,6,7,8, 11,12 ஆகிய இடங்களுக்கு அதிபதிகள் அனைத்தும் ஒன்றுகூடி லக்னத்தைப் பார்ப்பதால் விரயங்கள் மேலோங்கும். வீடு தேடி வரும் விருந்தினர்கள் தொல்லை அதிகரிக்கும்.

உறவினர்களுக்காக ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகப் போகிறது. இராசிநாதனும் வக்ர கதியில் இருப்பதால் எந்தச் செயலைச் செய்தாலும் நாம் செய்யும் செயல் சரியானது தானா? என்பதை யோசித்து செய்யுங்கள். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் ஒரு சிலருக்கு உருவாகலாம்.

நாட்டுப் பற்று மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

என்ன இருந்தாலும் தனாதிபதி செவ்வாய் நீச்சம் பெறும் இந்த நேரத்தில் பணம் வந்த மறுநிமிடமே செலவாகலாம். வரும் செலவுகள் வீண் செலவாகாமல் இருக்க வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். கண்டகச்சனி முடிந்தாலும் அஷ்டமத்துச் சனி வரப்போகிறது. எனவே இப்போதிலிருந்தே சனி பகவானை வழிபட்டு வந்தால் எப்பொழுதும் நற்பலன்கள் கிடைக்கும்.

புதன் மாதத் தொடக்க நாளில் சப்தம ஸ்தானத்தில் உச்சம் பெறுகிறார். எனவே விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு மறக்க முடியாததாக அமையும். கடல் தாண்டிச் செல்லும் வாய்ப்பும் ஒரு சிலருக்கு வந்து சேரும். உடல் நலத்தை மட்டும் நீங்கள் சீராக வைத்துக் கொண்டால் உற்சாகத்தோடு செயற்பட இயலும். இடம், பூமி வாங்குவதில் ஏமாற்றங்கள் ஏற்படாமல் இருக்க பத்திரங்களைச் சரிபார்த்து வாங்குவது நல்லது.

புதனும் சுக்ரனும் அஷ்டமத்தில் இணையப் போகிறார்கள். 4,7 க்கு அதிபதியும் 3,8 க்கு அதிபதியும் ஒக்டோபர் 4,5 திகதிகளில் ஒன்றாக இணைகிறார்கள். இதனால் வீடு வாங்கும் யோகமும் வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும் வாய்ப்பும் ஒரு சிலருக்கு கிடைக்கும்.

ஆனால் அதே நேரம் பெண் வழிப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். பெண் குழந்தைகளாலும் பிரச்சினைகள் ஏற்பட்டு

## சிவல்புரி சிங்காரம்

அகலும். வரவும் செலவும் சமமாகும். இம்மாதம் புதன்கிழமைதோறும் விஷ்ணுவையும் வியாழக்கிழமைதோறும் குருவையும் சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபாட்டு வாருங்கள்.

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவதோடு அன்றாட வரவு-செலவுகளிலும் கவனம் செலுத்த வேண்டிய மாதமிது. குருவின் வக்ரமும் செவ்வாயின் நீச்சமும் குடும்பத்தில் குழப்பங்களை கூடுதலாக்கும். உடன் பிறப்புகளை அனுசரித்து செல்வதே நல்லது. குல தெய்வ வழிபாட்டிலும் முன்னோர் வழிபாட்டிலும் ஆர்வம்காட்டுவீர்கள். மூன்றாம் நபரின் தலையீட்டால் கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை குறையலாம் என்பதால் உடன்பழகுபவர்களிடம் கவனம் தேவை. சுப விரயங்கள் அதிகரிக்கும். துர்க்கை, சரஸ்வதி, இலட்சுமி வழிபாடு உங்கள் துயரங்களை துள்ளியோட வைக்கும். (முற்றும்)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 37 பேர் பொலிஸாரால் கைதாகினர்

## பேச்சாளர் மெக்ஷிபுரொக்டர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த சில தினங்களில் மதுபோதையுடன் வாகனம் செலுத்திய 37 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 3 மாதங்களுக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளன.

வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக இத்திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் மெக்ஷி புரொக்டர் கூறினார்.

கொழும்பில் மதுபோதையுடனான சாரதிகள் காரணமாக ஏற்பட்ட இரு விபத்துக்கள் குறித்த தகவல்களின் பின்னரே இச்சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார். கொழும்புப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் அநுரசேனநாயக்கவின் பணிப்பின் கீழ் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்கள் கொழும்பு வாகனப்போக்குவரத்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதேவேளை மின் விளக்குகள் இல்லாத துவிச்சக்கரவண்டிகள் காரணமாகவும் விபத்துக்கள் அதிகரித்திருப்பதை பொலிஸ் திணைக்களம் கண்டறிந்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவற்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை பொலிஸார் நடத்தவுள்ளனர்.

(4-2)

# இலங்கைக்கு கடன் வழங்குவதை சர்வதேச நாணயநிதியம் ஒத்திவைத்தது

(கொழும்பு)

நிபந்தனைகளை உரிய முறையில் பூர்த்தி செய்யாத காரணத்தினால் கடன் வழங்குவதனை சர்வதேச நாணய நிதியம் ஒத்திவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அரசாங்க நிறுவனங்கள் நட்டத்தை எதிர்நோக்கி வருவதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

நாட்டின் பொருளாதார நிலைமைகளை மதிப்பீடு செய்வதன் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியம் கட்டம் கட்டமாக கடனுதவிகளை வழங்கி வருகின்றது.

ஒன்பதாம் கட்ட கடனுதவியை குறித்த மதிப்பீடுகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் மேற்கொள்வதில்லை என நாணய நிதியம் தீர்மானித்துள்ளது.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் கட்டம் கட்டமாக சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஓகஸ்ட் மாதம் 9 ஆம் கட்ட கடனுதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்ற போதிலும் பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில் கடனுதவி வழங்கும் நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பொருளாதார நிலைமை ஆரோக்கியமாக காணப்படுகின்றது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நிலைமைகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கமே கோரியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய இயலுமை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மதிப்பீடுகளை காலம் தாழ்த்தி நடத்துமாறு அரசாங்கமே கோரிக்கை விடுத்தது என சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

(4-2)

## ஜோதிடக் களம்

# வீட்டில் உள்ள பொருட்களை வாஸ்து முறைப்படி அமைப்பது எப்படி?

வாஸ்து சாத்திரம் என்பது பஞ்ச பூதங்களாகிய நீர், நெருப்பு, காற்று, பூமி, ஆகாயம் ஆகியவற்றின் சேர்க்கையே. பஞ்ச பூதங்களை ஒருங்கிணைத்து அவற்றை நமக்கு சாதகமாக்கி நற்பலன்களை அடைய கட்டடத்தின் முக்கிய அம்சங்களான சுவர்கள், கதவுகள், மற்றும் ஜன்னல்களை சாஸ்திர முறைப்படி அமைப்பதுடன் உட்புற அறைகளில் உபயோகிக்கும் பொருட்களையும் வாஸ்து முறைப்படி அமைப்பதும் இன்றியமையாதது.

நாம் அன்றாட வாழ்க்கையில் உபயோகிக்கும் தொலைக்காட்சி, கணிப்பொறி, வானொலி, குளிர்சாதனப் பெட்டி, பீரோ, வோஷிங்மெசின், சோபா, டைனிங்ரேபிள் போன்ற பொருட்களையும் பாத்திரம் கழுவும் தொட்டி, கை கழுவும் தொட்டி போன்றவற்றையும் வாஸ்து முறைப்படி அமைக்கும் முறையினைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

வீட்டின் தென்மேற்கில் அதிக எடை மற்றும் உயரமுள்ள பொருட்களை அமைத்து தென் கிழக்கு, வடமேற்கு, வடகிழக்கு என எடை மற்றும் உயரம் குறைந்து கொண்டே வருவது போல் பொருட்களை அமைப்பது அவசியம். இதேபோல் ஒவ்வொரு அறையிலும் அமைக்கப்படும் பொருட்களையும் தென்மேற்கிலிருந்து வடகிழக்கு வரை எடை மற்றும் உயரம் குறைந்து கொண்டே வருவது போல் அமைக்க வேண்டும். முடிந்த வரை ஒவ்வொரு அறையின் ஈசான மூலையிலும் பொருட்கள் ஏதும் இல்லாமல் காலியாக அமைப்பது அதிக நற்பலன்களைத் தரக்கூடிய அமைப்பு. ஒவ்வொரு அறயின் கதவையும் ஈசானிய மூலையில் அமைக்கும் போது இந்த அமைப்பை எளிதில் பெறலாம்.

வீட்டின் தெற்கு, மேற்கு மற்றும் தென்மேற்கு, தென்கிழக்கு ஆகிய பகுதிகளில் அமைக்கப்படும் அறைகளை பெரியதாகவும் கிழக்கு, வடக்கு, வடமேற்கு, ஆகிய பகுதிகளில் அமைக்கப்படும் அறைகளை சிறியதாகவும் அமைப்பது அதிக நற்பலன்களை ஏற்படுத்தும்.

நாம் அமரும் சோபாக்கள் மற்றும் நாற்காலிகளை வடக்கு அல்லது கிழக்குத் திசையை நோக்கி இருப்பது போல் அமைக்க வேண்டும்.

இவ்வாறு அமைக்கப்படும் சோப்பாக்களை அறையின் தென்மேற்கு மூலையிலோ தெற்கு அல்லது மேற்கு பகுதியிலோ அமைப்பது அவசியம். பொதுவாக வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளை பார்க்கும் போது வீட்டின் இத்திசையில் அமைந்துள்ள பகுதிளை பயன்படுத்தும் போது ஞாபகசக்தி, இரத்த ஓட்டம், மேலோங்கிய சிந்தனை, சுறுசுறுப்பு ஆகியவை அதிகமாக இருப்பதால் தெளிவான முடிவுகளை எடுக்க முடியும்.

மேலும் வடக்கு திசையை பார்த்து நாம் உரையாடும் போது பேச்சில் அதிகாரமும் பிறரிடமிருந்து மரியாதையும் நம் கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களும் அதிகரிக்கும்.

வடக்கு-கிழக்கு இரு திசைகளும் நற்பலன்களை கொடுக்கும் திசைகளாகும். படிக்கும் போதும் கணிப்பொறியை உபயோகிக்கும் போதும் தொலைக்காட்சியைப் பார்க்கும் போதும் நாம் அதிக நேரம் கிழக்கு திசையை பார்ப்பது போல் இவைகளை அமைக்க வேண்டும்.

தொலைக்காட்சியை கோலின் தென் கிழக்கு மூலையிலும் சோகேஸ் அல்லது கபேட்டைதென்மேற்கிலும் சோபாக்களை கபேட்டுக்கு அடுத்து தென்மேற்கிலும் அமைக்க வேண்டும். படிக்கும் அறையிலும் கிழக்கு அல்லது வடகிழக்கு பார்த்து படிப்பது போல் மேசை மற்றும் நாற்காலியை அமைத்துக் கொள்வது சிறப்பு. கணிப்பொறி சற்று எடையுள்ள பொருளீ என்பதால் இதனை ஈசானிய மூலையிலிருந்து சற்று தள்ளி கிழக்குப் பார்த்து பயன்படுத்துவது போல் அமைக்க வேண்டும்.

இதைத் தவிர வீட்டின் உரிமையாளர் கோலில் பவுண்டேனை உபயோகிக்க விரும்பினால் வடகிழக்கு மூலையில் அதிக எடையில்லாத சிறிய பவுண்டேனை அமைத்து அலங்கரிக்கலாம். பெரிய பவுண்டேனை கோலில் அமைக்கும் பட்சத்தில் அறையின் மையப்பகுதியில் அமைக்க வேண்டும். உணவறையில் அமைக்கப்படும் கை கழுவும் தொட்டியை வடகிழக்கிலும் உணவு அருந்தும போது கிழக்கு அல்லது மேற்கு பார்த்திருப்பது போல் டைனிங்டேபிளையும் அமைக்க வேண்டும்.

உணவறையில் அமைக்கப்படும் ஷோகேஸை தென்மேற்கிலும் குளிர்சாதனப் பெட்டியை ஷோக்கேஸிற்கு அருகாமையில் தென் மேற்கிலும் அமைக்க வேண்டும். சமையல் அறையில் தென்கிழக்கு மூலையில் மேடை அமைத்து சமைப்பவர் முகம் கிழக்கு பார்த்து இருப்பது போல் அடுப்பை அமைப்பது பெண்களிடையே சமைக்கும் ஆர்வத்தையும் நல்ல சுவையான உணவை தயாரிக்கும் ஆர்வத்தையும் அதிகரிக்கும்.

பாத்திரம் கழுவும் தொட்டியினை வடகிழக்கிலும் எலட்ரிக் சிம்னி அல்லது எக்சாஸ்ட் பேன் தென்கிழக்கின் தெற்கிலும் மேலும் அதிக எடையுள்ள மாவு அரைக்கும் மெஷினை, பெரிய பாத்திரங்கள் ஆகியவற்றை தென்மேற்கு மூலையிலும் அமைப்பது சிறப்பு. பூஜையறையில் சாமிப் படங்கள், குத்துவிளக்கு மற்றும் பூஜைக்கு தேவைப்படும் பெருட்களை மேற்கு திசையில் மேடை அமைத்து இவைகள் கிழக்கு பார்த்திருப்பது போல் இருக்க வேண்டும்.

கழிவறையில் கை கழுவும் தொட்டி வடகிழக்கிழக்கிலும் க்ளாசட்டை தெற்கு பார்த்து பயன்படுத்துவது போலும் வோட்டர் ஹீட்டரை தென்கிழக்கிலும் அமைக்க வேண்டும்.

முகம் பார்க்கும் கண்ணாடியை கிழக்குப் பார்த்து பயன்படுத்துவது போலும் தண்ணீர் குழாயிலிருந்து வரும்நீர் கிழக்கு அல்லது வடக்கு திசையிலிருந்து வருமாறு அமைக்க வேண்டும்.படுக்கையறையில் கப்போர்டு அல்லது பீரோவை தென்மேற்கிலும் கட்டிலை கப்போர்டுக்கு அடுத்து வருமாறு தென் மேற்கில் தெற்குப் பார்த்து தலைவைப்பது போலும் அமைக்கலாம்.




இவ்வாறு அமைத்தால் ஆழ்ந்த உறக்கத்தையும் மனநிம்மதியையும் உடல் ஓய்வும் அளிக்கக்கூடியது. டிரஸ்ஸிங் டேபிளை வடமேற்கில் அமைத்து வடக்குப் பக்கம் கண்ணாடியை பார்ப்பது போலும் படுக்கையறையில் பரண் அமைக்க விரும்பினால் தெற்கு அல்லது மேற்குப் புறமும் அமைக்கலாம்.

பெரிய கப்பலானாலும் சிறிய ஓடமானாலும் எடையை சரியாக வைக்காமல் போனால் அது கடலில் மூழ்கி விடும் அல்லவா?

அதேபோல் பெரிய வீடானாலும் சிறிய குடிசையாக இருந்தாலும் வாஸ்து சாஸ்திர முறைப்ப்டி சம எடை சூத்திரத்தை பயன்படுத்தி வீட்டில் பொருட்களை வைத்து நற்பலன்களைப் பெறுங்கள்.

# சர்வதேச அரங்கில் இலங்கை தனிமைப்படுத்தப்படும் அபாயம்

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)



சர்வதேச அரங்கில் இலங்கை தனிமைப்படுத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக் தெரிவித்துள்ளார்.

உலக சமூகத்தில் இலங்கையை அங்கத்தினராக உருவாக்குவோம் என மார்தட்டிக் கொண்ட அரசாங்கம் பல நாடுகளுடன் பகைமை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, ஐப்பான் ஐரோப்பா போன்ற சகல நாடுகளுடனும் அரசாங்கம் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாடு தனிமைப்பட்ட ஓர் பயணத்தை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ராஜகிரியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்து கொண்டே போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிடடுள்ளார்.

வாழ்க்கைச் செலவு வெகுவாக உயர்வடைந்துள்ளதாகவும் இதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வறுமையை இல்லாதொழித்து நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்வதே தற்போது அவசியமாகின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (4-2)

# கொழும்பு வாழ் சேரி மக்களை பலவந்தமாக வெளியேற்ற முடியாது

## முஸம்மில் தெரிவிப்பு

கொழும்பு வாழ் சேரி மக்களை பலவந்தமான முறையில் வெளியேற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

சேரிகளில் வாழும் மக்களின் உரிமைகள் முடக்கப்படுவதனை அனுமதிக்க முடியாது என கொழும்பு மாநகரசபை ஐக்கிய தேசியக் கட்சி மேயர் வேட்பாளர் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

நடைபாதை வியாபாரிகள் மற்றும் சேரி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், பெய்ரா வாவியை அண்டிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சுதுவெல்ல பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானமுடைய மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியே வீடுகளை அமைத்துக் கொடுத்தாதகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேரி மக்களை ஐக்கிய தேசியக் கட்சி வெளியேற்றியதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (4-2)

# மோதரைப் பகுதியில் 3 சந்தேகநபர்கள் கைது

வாகனங்களை வாடகைக்கு வழங்கும் இடங்களில் இருந்து பெற்று அவற்றை அடகு வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட 3 சந்தேகநபர்கள் மோதரைப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அவ்வாறு பெற்றுக் கொண்ட வாகனங்களை ராகமை, களனி, தளங்கம மற்றும் ராஜகிரிய போன்ற பகுதிகளில் விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அடகு வைக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் ஆறும் வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-2)

# நவீன எண் சோதிடம்



## பிறரைக் கவரும் பேச்சாளராகவும் தைரியசாலியாகவும் சுதந்திரப் பிரியராகவும் இருப்பவர்கள்

51

## உடல் எண் 6 உயிர் எண் 4

6,15,24 போன்ற தேதியில் பிறந்து, தேதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானால் சுக்கிரன், இராகுபோன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் பிறரைக் கவரும் போச்சாளராகவும், தைரியசாலியாகவும், சுதந்திரப் பிரியராகவும் இருப்பர். இவருடைய மனம் பொதுச்சேவை செய்வதிலும், தன் வாழ்க்கையை உயர்த்திக் கொள்வதிலும் அழகான பொருளைச் சேர்ப்பதிலும் நாடிச் செல்லும். பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகக் காட்சியளிக்கும் இவர்கள், அலை போன்ற முடி உடையவராகவும், இரட்டை நாடி கொண்டவராகவும் பிறரை மகிழ்வித்து பொருளீட்டக் கூடிய தொழில்களைச் செய்பவராகவும் இருப்பர்.

இவர்களுடைய பெயர் தனது பிறந்த தேதிக்கு பொருத்தமாக அமையாவிட்டால் வெட்டி வம்பும் வீண் பேச்சும், கொண்டவராகவும் தனது திறமையெல்லாம் தனக்குப் பயன்படாது பிறருக்குப் பயன்படும் படியும் வாழ்வர். ஆனால் இவர்கள் பெயர் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால் வீடு, நிலம், வாகனம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

போன்றவைகள் அமைந்து, உலகிலுள்ள அனைத்து சுகங்களையும் அனுபவிப்பர். இவர்களுடைய மனம் இன்பகரமான வாழ்வை நோக்கியே செல்லும். பலருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்கள் பலரால் போற்றப்படும் மனிதனாக வாழ்வர்.

மற்றவர்கள் நலமாக வாழ ஓடோடி உழைக்கும் எண்ணம் கொண்டவராகையால் ஆண்டவன் இவர்களைக் கைவிடுவதில்லை. சில நேரங்களில் ஒரு வேலையைப் பாதியில் விட்டு விட்டு அடுத்த வேலைக்குச் சென்றுவிடுவர். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் பெரும் வசதி படைத்தவராக இருந்தாலும் தேவையில்லாத காரியங்களில் இறங்கி மாட்டிக் கொண்டு மனவேதனைப்படுவர். ஜாமின் கையெழுத்துப் போட்டு மாட்டிக் கொள்ளும் வழக்கமும் உண்டு. எந்தப் பொருளையும் ஆராய்ந்து பார்க்கும் தன்மை உடையவர்கள். இவர்கள் மனம் எப்போழுதும் அழகான பொருளை நோக்கியே செல்லும். அழகான வீடு கட்டுதல், அலங்கரித்த கார் வைத்துக் கொள்ளுதல், வீட்டில் அழகுப் பொருட்களை வைத்தல், அழகான ஆசனங்களைப் பாவித்தல் போன்றவற்றில் நாட்டமுடையவராக இருப்பர்.

இசை, நாட்டியம், விளையாட்டு, சட்டம், சமயம், போன்றவற்றில் விருப்பமுடையவராக விளங்குவர். ஆடம்பரப் பிரியரான இவர்கள் சில நேரங்களில் மிக எளிமையாகத் தோற்றமளிப்பர். வாகனங்களை அடிக்கடி மாற்றுவதன் மூலம் இலாபம் பெறும் பாக்கியம் உடையவர்கள். திடமான மனநிலை கொண்ட இவர்கள் ஒருவருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற கடினமாக உழைத்து, வெற்றியை தேடிக் கொள்ளுவர். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாததால் இவர்களை மற்றவர்கள் திறந்த மனம் கொண்டவர் என்று அழைப்பர்.

இந்த உலகத்தில் எவ்வளவோ அனுபவிக்க வேண்டியது இருக்கிறது, எவ்வளவோ சுகங்கள் இருக்கிறது என்று கூறுபவர்களும் இவர்களே. கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் அடிக்கடி கோவிலுக்குப் போகாவிட்டாலும், கடவுளை வெறுப்பவரல்லர். தர்மம் செய்வதிலும், கூன், குருடு, ஊன முற்றோர் போன்றவர்களுக்கு உதவுவதிலும் மிகுந்த ஆர்வமுடையவர்கள். சோம்பேறியாக இருக்கும் மனிதர்களைக் கண்டாலே இவர்களுக்கு பிடிக்காது.

**எண் கணித நிபுணர்**
**கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT**

சாப்பாட்டுப் பிரியரான இவர்கள், சுவாரசியமாகப் பேசிக் கொண்டே உண்பர். போகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அதிக நாட்டம் கொண்ட இவர்கள் தன் மனக்கட்டுப்பாட்டால் நிதானமாக நடக்க முற்படுவர். பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்து விடுமேயானால் வாழ்க்கை சிறப்பாக அமையும். பெற்றோர்களால் தேடப்பட்ட சொத்தும் கிடைக்கும்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பேரம் பேசுவதாலும், ஓரிடத்திலிருந்து பொருளை மற்றோரிடத்திற்கு அனுப்புவதாலும் ஆடம்பரப் பொருட்களாலும் இலாபம் கிடைக்கும். வாகனம், கான்ட்ராக்ட், ஏஜென்சீஸ், அழகுசாதனங்கள், தொழிற்கூடங்கள் இவர்களுக்கு அமைய வாய்ப்பு உண்டு.

**நோய்**

இவர்களுக்கு உடலுறவு சம்பந்தமான, உஷ்ண சம்பந்தமான நோய்கள், வயிற்றுக் கோளாறு, மூட்டு வலி போன்றவைகள் வந்து நீங்கும். சிலருக்கு இளமையிலேயே முடி உதிர்வதும் உண்டு.

**பெயர் அமைக்கும் முறை**

சுக்கிரன், ராகு, போன்ற ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சுக்கிரன், சூரியன் ஆதிக்கமான 15,24,33,42,60,69,19,37,46,64 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 6,1

யோகமான தேதிகள்- 6,15,24, 1,10,19,28

யோகமான நிறம்- பச்சை, வெளிர்நீலம், மஞ்சள்

யோகமான மோதிரக்கல்- மரகதம், கோமேதகம்,

ஆகாத தேதிகள்- 3,12,21,30

ஆகாத நிறம்- ரோஸ்,ஆரேஞ், கத்தரிப்பூ நிறம், கறுப்பு, சிவப்பு

* * *

## பெயர் எண்களின் பலன்

**47 எண் பலன்**

இந்த எண்ணில் ஞானத்திற்குரிய 4 என்ற ராகுவும் மோட்சத்தைக் கொடுக்ககூடிய 7 என்ற கேதுவும் சேர்ந்து 47 வருவதால் நல்ல ஆராய்ச்சி மனப்பான்மை பெற்ற இவர்கள் பலருக்கு அறிவுரை கூறுவதில் சிறந்து விளங்குவர். பொருளாதார வசதி சிறப்பாக இருக்கும். தெய்வீக அருள் நிறைந்த இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் தன் நடவடிக்கையில் எவ்விதப் பழிச் செயல்களும் செய்யாமல் இருப்பது நல்லது. மோட்சத்துக்குரிய 7 எண் இருப்பதால் 7,16,25 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு நல்ல பலனை அளிப்பதோடு மோட்சமும் கிடைக்கலாம். ஆனால் 9,18,27 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு கெடுதலை விளைவிக்கும்.

**48 எண் பலன்**

இவர்கள் தன் சுய வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள முடியாது. எங்கு சென்றாலும், தோல்வியைச் சந்திக்க நேரும். ஆனால் தன்னைச் சார்ந்த சமுதாயத்திற்கும், மதத்திற்கும் நல்லது செய்ய முன்வருவர். அவ்வாறு நல்ல காரியத்தைச் செய்தாலும், இவர்களுக்கு கிடைக்க வேண்டிய புகழை மற்றவர் தட்டிக் கொண்டு சென்றுவிடுவர். கடைசியில் பொருள் கிடைக்காமலும், புகழ் கிடைக்காமலும் வேதனைப்படுவர். 3,12,21,30 தேதியில் பிறந்தவர்களுக்கு ஓரளவு நன்மை கிடைக்கும்.



**49 எண் பலன்**

இந்த எண் பெயரில் அமைந்தால் பல மக்களுக்குத் தலைவனாக காட்சியளிப்பர். பலருக்கு வழி காட்டியாக வாழ்வதோடு, துணிந்து எந்தக் காரியத்திலும் இறங்கி வெற்றி பெறுவர். இவருடைய பெயர் எங்கும் பரவும். பல விரதீரச் செயல்களும் செய்து காட்டுவர். சிறந்த பேச்சாளராகத் திகழ்வர். பல்வேறு வழிகளில் செல்வம் சேரும். பல மனிதனுடைய பிரச்சனைகளைத் தாங்கி நிற்பதால் திடீரென்று ஆபத்து வரும். ஆனால் 1,10,19,28 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணிக்கையில் பெயரை அமைத்துக் கொண்டால் மிக மேன்மையடைவர்.

(தொடரும்)

# மனித உரிமை கண்காணிப்பகம் நம்பகத்தன்மையானதா?

## சவேந்திர சில்வா கேள்வி



(கொழும்பு)

மனித உரிமை கண்காணிப்பகம் நம்பகத்தன்மையுடையதா என ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர பிரதிப் பிரதிநிதி சவேந்திர சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற நான்கு- ஐந்து மாதங்கள் பற்றிய விடயங்களை மட்டும் கருத்திற் கொள்வது நியாயமாக அமையுமா என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

27 ஆண்டுளாக தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வந்த பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து மனித உரிமை கண்காணிப்பகம் கவனம் செலுத்த தவறியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுகின்றன என்பதற்கு மிகச் சிறந்த சான்றாக அண்மையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதனை குறிப்பிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

மிகவும் குறுகிய காலத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டு அவர்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்கிய இலங்கை அரசாங்கத்திற்கு பாராட்டு தெரிவிக்க சில தரப்பினர் தயக்கம் காட்டி வருகின்றமை அதிருப்தி அளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரச்சினையின் சகல கோணங்களையும் யதார்த்தமாக ஆராயும் நோக்கில் உண்மையைக் கண்றியும் ஆணைக்குழு உருவாக்கப்பட்டதாகவும் அரசாங்கத்தை பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் யுத்தத்தில் உயிரிழந்துள்ளதாகவும் இதனால் அவர்களுக்கு எதிராக குற்றச் சாட்டுக்களை சுமத்துவதில் அர்த்தமில்லை எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

எனினும் அடேல் பாலசிங்கம், ருத்ரகுமாரன் போன்ற புலிகளின் அரசியல் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்சேகா விசாரணை குறித்து அடுத்த மாதமளவில் அறிக்கை

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வழக்கு விசாரணைகள் தொடர்பில் அடுத்த மாதமளவில் அறிக்கை வெளியிடப்படவுள்ளதாக சர்வதேச அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் அறிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்தமை மற்றும் ஏனைய வழக்குகள் தொடர்பில் நேரில் ஆராயும் நோக்கில் சர்வதேச அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் அண்மையில் பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தது.

குறித்த பிரதிநிதி சரத் பொன்சேகாவை சிறையில் சென்று சந்தித்துள்ளார். பாராளுமன்ற ஒன்றியத்தின் இடைக்கால அறிக்கை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. விரைவில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையில் சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில் சர்வதேச அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் அமர்வுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, உரிமை மீறப்பட்டதாகத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணா நாயக்க மற்றும் ரோசி சேனாநாயக்க ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை பாராளுமன்ற ஒன்றியம் ஏற்றுக்கொண்டுள்ளது. (4-2)

# கப்பம் கோருபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை

## கோத்தபாய தெரிவிப்பு



பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை புறக்கோட்டை வர்த்தக சமூகத்தினர் நேற்று முன் தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

வர்த்தக நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்வதற்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்கும் என்றும் கப்பம் கோருகின்றவர்கள் மற்றும் பொருட்களை அபகரிக்கின்றவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதன்போது பாதுகாப்புச் செயலாளர் உறுதி அளித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான பிரபாகணேசன், திலங்க சுமதிபால ஆகியோருடன் வர்த்தகர்களான கே. பழனியாண்டி, ஈ.தவஞானசூரியன் உட்பட பல பிரமுகர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (4-2)

# ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையை பேரவையில் சமர்ப்பிக்க வேண்டாம்

## நவநீதம்பிள்ளையிடம் வலியுறுத்து



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ - மூனின் நிபுணர் குழுவினர் அறிக்கையை ஐ.நா. மனித உரிமை பேரவையின் நிகழ்ச்சி நிரலுக்கு புறம்பான வகையில் சமர்ப்பிக்க வேண்டாம் என கோரி ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட 9 நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் அவசர மனு ஒன்றை அனுப்பி கோரிக்கை முன்வைத்துள்ளன.

இந்த அறிக்கை மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் திடீரென சமர்ப்பிக்கப்படுவது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

மாலைதீவு, பங்களாதேஷ், அல்ஜீரியா, கியூபா, மலேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் இந்த கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும் இந்தக் கோரிக்கையுடன் இந்தியா தொடர்புபட்டு இருக்கவில்லை.

இதேவேளை, நிபுணர் குழுவின் அறிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படுவது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவாவுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (4-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1792-பிரான்சில் முடியாட்சி அகற்றப்பட்டு குடியரசு நிறுவப்பட்டது.

★ 1860-இரண்டாம் ஓப்பியம் போர்: ஆ[illegible] பிரெஞ்சுப் படை க[illegible]ப் படைகளைத் தோற்கடித்தன.

★ 1896-பிரித்தானியப் படைகள் சூடானின் டொங் கோலா நகரைக் கைப்பற்றின.

★ 1939-ருமேனியாவின் பிரதமர் ஆர்மண்ட் கலி னெஸ்கு தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1972-பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினண்ட் மார்க்கோஸ் முழு நாட்டிலும் இராணுவ ஆட்சியைப் பிறப்பித்தார்.

★ 1981-பெலீஸ் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1995-விநாயகரின் சிலைகள் பால் குடிக்கும் அதிசயம் உலகின் பல இடங்களில் இடம்பெற்றது.

★ 1999-தாய்வானில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 2 ஆயிரத்து 400 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2001-நாசாவின் டீப் ஸ்பேஸ் 1 விண்கலம் பொரெல்லி வால் வெள்ளிக்குக் கிட்டவாக 2 ஆயிரத்து 200 கி.மீ. தூரத்திற்குள் சென்றது.

★ 2003-கலிலியோ விண்கலத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு அது ஜூப்பிட்டர் கோளின் வளிமண்டலத்தினுள் அனுப்பப்பட்டு அதனுடன் மோதவிடப்பட்டது.

★ 2004-பூர்ஜ் டுபாய் கட்டட அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1866-எச்.ஜி.வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர் (இ.1946)

★ 1957-கெவின் ரட், அவுஸ்திரேலியாவின் 26 ஆவது பிரதமர்

★ 1963-கேட்லி அம்ப்ரோஸ் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் பந்தாளர்

### இறப்புகள்

★ 1971-பெர்னார்டோ ஹூசே, நோபல் பரிசு பெற்றவர் (பி.1887)

★ 2007-விஜயன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

★ 2008-டி.பி. விஜயதுங்கா, இலங்கையின் 4 ஆவது ஜனாதிபதி (பி.1922)

### சிறப்பு நாட்கள்

★ உலக அமைதி தினம்

★ மோல்ட்டா- சுதந்திர தினம் (1964)

★ பெலீஸ்- சுதந்திர தினம் (1981)

★ ஆர்மேனியா- சுதந்திரதினம் (1991)



★ 1989-இலங்கை மனித உரிமை மற்றும் பெண் உரிமை செயற்பாட்டாளர் ராஜினி திரணகமவின் நினைவு தினம் (பி.1954)

# கல்வியமைச்சின் கல்வி நடவடிக்கைகளை பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்றன

(கொழும்பு)

மாணவர்களின் கல்வித்தர மேம்பாட்டுக்காக கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் வெற்றியளிப்பதையே அண்மைக்காலமாக மாணவர்கள் பெறும் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்துவதாக கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டுப் பிரிவின் தமிழ்மொழிப் பாடசாலைகளின் கல்வித்தர விருத்தி வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டுப் பிரிவின் கல்வித்தர விருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ் வேலைத்திட்டம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சிறந்த மாணவர்களை உருவாக்குவதன் மூலமே சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும். பாடசாலைகளின் கல்வித் தரம் தரமுள்ளதாக இருப்பின் அப் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்களின் கல்வி நிலையும் தரமுள்ளதாக அமையும்.

எமது வேலைத்திட்டத்தின் ஊடாக பாடசாலைகளின் முகாமைத்துவம், பௌதீக வள நிலைமைகள், வகுப்பறைச் செயற்பாடுகள், பாட விடயங்கள் கற்பிக்கும் முறைமைகள், மாணவர்களின் கல்வி மட்ட நிலைகள் என பொதுவான வெளிவாரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பாடசாலை உள்வாரி மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளின் பொது முகாமை, பௌதீக மனித வள முகாமை,முறையான கலைத்திட்ட முகாமை, இணைப்பாடவிதான செயற்பாடுகள், மாணவர் அடைவு மட்டம், மாணவர் நலன்புரி சேவை, பாடசாலை சமூக உறவு போன்றவற்றின் தரங்கள் வேலைத் திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் சமூகம் எதிர்பார்க்கும் பெறுமதிமிக்க விழுமியங்களைக் கொண்ட மாணவர்களின் திறனை விருத்தி செய்ய வழிகாட்டுதல் மற்றும் மாணவர்கள் தங்களது சுய இலக்கினை அடைந்து கொள்வதற்கான சிந்தனைத் திறனை விருத்தி செய்வதற்கு திசை முறைப்படுத்தல் போன்ற மேம்பாட்டு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழ்மொழிப் பாடசாலைகளின் கல்வித்தர விருத்தி தொடர்பான மதிப்பீட்டுப் பணிகள் தற்போது மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (4-2)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வை.சாரங்கன் எழுதிய புதையல்கள் எனும் நூல் வெளியீட்டு விழா நிகழ்வு இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு தெல்லிப்பளை, யா/மகாஜனக் கல்லூரி துரையப்பாபிள்ளை அரங்கில் இக் கல்லூரியின் மாணவர் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யா/மகாஜனக் கல்லூரி அதிபர், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கு.கௌதமன், ஜீவநதி சஞ்சிகை பிரதம ஆசிரியர் க.பரணீதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(4-2)

# மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்த ஜெனரல்களை பயன்படுத்துகிறார்கள்



## பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் சில இராணுவ ஜெனரல்களை ஈடுபடுத்துகின்றனர் என முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

போரை வென்றெடுத்த படையினரதும் பொலிஸாரினதும் கடமை மக்களை பாதுகாப்பதாகும்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அரசாங்கத்துடன் இணைந்து சீருடைக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டாம்.

அரசியல்வாதிகளுடன் இணைந்து பாதுகாப்பு தரப்பினர் தங்களது கௌரவத்திற்கு களங்கம் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது என சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (4-2)

# விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் மெகசின் சிறைச்சாலைக்கு மாற்றம்

## சிங்கள, தமிழ் கைதிகளின் தகராறே காரணம்

(கொழும்பு)

கொழும்பு விளக்கமறியல்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த சந்தேக நபர்களில் ஒரு தொகுதியினர் நேற்று முன்தினம் மெகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஏனையோரும் இரண்டொரு தினங்களில் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்படவுள்ளனர் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு விளக்கமறியல்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க சந்தேகநபர்களான 240 பேரிலேயே 100 பேர் நேற்று முன்தினம் மெகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். தற்போது மெகசின் சிறையில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 140 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் சிங்கள கைதிகளால் தமிழ்க் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்தே பாதுகாப்பின் நிமித்தமாக இவர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (4-2)

# தரம்குறைந்த பெற்றோல் விவகாரம் தொடர்பில் ஆராய 2 ஆவது குழு

## அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த பணிப்பு

(கொழும்பு)

தரம் குறைவான பெற்றோல் காரணமாகப் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் வாகனங்களுக்கு நட்டஈடு கோரி கிடைத்துள்ள 3 ஆயிரம் வரையிலான விண்ணப்பங்களை ஆராய்வதற்காக இரண்டாவது குழுவொன்றை நியமிக்குமாறு பெற்றோலிய அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பணித்துள்ளார்.

நட்டஈடு எவ்வாறு வழங்கப்படும் என்பது பற்றி இப்போது எதுவும் கூறமுடியாது என கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் கூறினார்.

தேசிய அடையாள அட்டை,வாகன பதிவுப் புத்தகம், காப்புறுதி சான்றிதழ், திருத்த வேலைகளுக்கான பற்றுச்சீட்டுக்கள், பெற்றோல் நிலைய பற்றுச்சீட்டுக்கள் இல்லாத பட்சத்தில் சத்தியக் கடதாசிகள் ஆகியவற்றின் நிழற் பிரதிகளை அனுப்பி வைக்குமாறு விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பெற்றோலிய அமைச்சர் முதலில் நியமித்த மூன்று அங்கத்தவர் குழுவான பெற்றோல் கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம் 90 ஒக்டென் பெற்றோலிலிருந்து வேறுபடும் வீதம் சேமிப்பு தாங்கிகளில் உள்ள பெற்றோலின் தரம் என்பன பற்றி அறிக்கைஒன்றை வழங்கியுள்ளது. (4-2)

# பிரித்தானியா விசாவுக்கு போலி சான்றிதழ் வழங்கிய மாணவி கைது

(கொழும்பு)

பிரித்தானியா விசா பெறுவதற்காக போலி கல்விச் சான்றிதழை சமர்ப்பித்த இலங்கை மாணவியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரித்தானிய எல்லை பாதுகாப்பு முகவரம் இவ்விவகாரத்தை இலங்கை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது. போலி ஆவணத்திற்காக தான் முகவர் ஒருவருக்கு பணம் செலுத்தியதாக இவ் விண்ணப்பதாரி தெரிவித்துள்ளார்.

இம் மாணவி பொலிஸ் விசாரணையை எதிர்நோக்குவதுடன் பிரிட்டனுக்கு செல்வதில் 10 வருடகால தடையையும் எதிர்நோக்குகிறார்.

பிரித்தானிய எல்லை பாதுகாப்பு முகவராக விசா விண்ணப்ப பரிசீலனை அதிகாரி கிளேரி முர்ரே இது தொடர்பாக கூறுகையில், தயவு செய்து போலி ஆவணங்களை சமர்ப்பிக்கவோ அல்லது அப்படி செய்யலாம் எனக் கூறுபவர்களுக்கு செவிமடுக்கவோ வேண்டாம். ஆவணங்களை நாம் மிகக் கவனமாக பரிசீலிப்போம். மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டால் போலி ஆவணங்களை சமர்ப்பித்தவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ள நாம் தயங்க மாட்டோம் எனக் கூறியுள்ளார். (4-2)

# ஐக்கியமற்ற ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிக்காதீர்கள்

## லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

ஐக்கியமற்ற ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்காளர்களின் பெறுமதியான வாக்குகளை அளிப்பதில் பயனில்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

மருதானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்ற போதே பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு நகரத்தின் சிறந்த அபிவிருத்தியை முன்னிட்டு அரசாங்கத்திடமே முறையான திட்டங்கள் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் நேற்றைய தினம் கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரம் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை வேட்பாளர் முசம்மில் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து வெளியிட்டார்.(4-2)

# கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் சேவைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் மற்றும் மீள் திரும்பியோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்விற்குமான செயற்றிட்டத்தினால் கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் கிராம சேவையாளர் பிரிவுகளான கோரக்கன்கட்டு,பரந்தன்,தட்டுவான் கொட்டி, ஊரியான் மக்களுக்கான நடமாடும் சேவை ஒன்றினை கண்டாவளை பிரதேச செயலகத்துடன் இணைந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.15 மணிவரை கோரக்கன் கட்டு குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள புலேந்திரன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் கண்டாவளை பிரதேச செயலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,பதிவாளர் நாயகம் திணைக்களம்,சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,சமூக சேவைகள் திணைக்களம், மாங்குளம் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பொலிஸ் நிலையம், பால் நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம், விவசாயத்திணைக்களம், நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம், கரைச்சி பிரதேச சபை போன்ற நிறுவனங்கள் தமது சேவையை வழங்கவுள்ளன.

எனவே, இப்பகுதி மக்கள் இந் நடமாடும் சேவையில் பங்குபற்றுவதன் மூலம் தங்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென கிளிநொச்சி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்ட பிராந்திய நிகழ்ச்சித்திட்ட அதிகாரி கெ.கமலேஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-12)

# ஐ.நா.பொதுச்சபையின் கூட்டத் தொடரில் 130 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பு

(நியூயோர்க்)

**ஐ.நா.பொதுச்சபையின் இந்தாண்டுக்கான கூட்டம் நேற்று ஆரம்பமாகியது. பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்ட 130 நாடுகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர். அதனால் அந்நகரில் வரலாறு காணாத பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.**

ஐ.நா. பொதுச்சபைக்கூட்டம் ஆண்டுதோறும் நடைபெறும் ஒன்று. இந்தாண்டுக்கான கூட்டம் 13ஆம் திகதியே ஆரம்பித்துவிட்டாலும் கூட்டத்தின் மிக முக்கியமான நிகழ்ச்சிகளான உலகத் தலைவர்களின் உரைகள், பொது விவாதம் போன்றவை நேற்று முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 27அம் திகதி வரை நடைபெறவுள்ளது.

நியூயோர்க் இரட்டைக்கோபுர தகர்ப்பின் 10ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு அமெரிக்காவில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்கலாம் என்று அமெரிக்க உளவுத்துறை நிறுவனங்கள் கூறியதையடுத்து அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு இன்னும் திரும்பப் பெறப்படவில்லை. மேலும் ஐ.நா. பொதுச் சபைக்கூட்டத்தை முன்னிட்டு 130 நாடுகளின் தலைவர்கள் அனைவரும் நியூயோர்க்கிற்கு வருவதால் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நியூயோர்க் பொலிஸ்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், 130நாடுகளின் தலைவர்கள் மற்றும் 220 வாகன அணிவகுப்புக்களின் பாதுகாப்பை முன்னிட்டு உளவுத்துறை மற்றும் வெளியுறவுத் துறையுடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.பாதுகாப்புக் குழுவில் விரிவாக்கம், அதில் இந்தியாவுக்கு நிரந்தர இடம், லிபியாவின் இடைக்கால குழுவுக்கு ஆதரவு ஆகியவற்றை பிரதமர் மன்மோகன்சிங் தனது உரையில் வலியுறுத்துவார் என வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இந்தக் கூட்டத்தை முன்னிட்டு ஐ.நா. தலைமை அலுவலகத்தின் வெளியில் திபெத், பாலஸ்தீனம், தாய்வான் போன்ற நாடுகளை ஐ.நாவில் உறுப்பினராக சேர்க்கக்கோரி பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் நடக்கவுள்ளன.

இந்தாண்டு ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் பல்வேறு உலக விவகாரங்கள் விவாதிக்கப்பட இருந்தாலும் மிகமுக்கியமான ஐந்து விவகாரங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கக்கூடிய விதத்தில் விவாதிக்கப்படவுள்ளன.

## முக்கிய விடயங்கள் விவாதிப்பு

### பாலஸ்தீனத்துக்கு உறுப்பினர் அந்தஸ்து

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இழுபறியில் உள்ள இஸ்ரேல்,பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் ஒருபடியாக பாலஸ்தீனத்துக்கு ஐ.நா.வில் முழுமையான உறுப்பினர் அந்தஸ்து வேண்டும் என அந்நாட்டின் ஜனாதிபதி முகமது அப்பாஸ் கோரியுள்ளார். தனது கோரிக்கையை பொதுச்சபை விவாதத்தில் வைக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவரது கோரிக்கையை பொதுச்சபை விவாதத்தில் வைக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவரது கோரிக்கையை தனது வீட்டோ எனப்படும் மறுப்பாணை மூலம் நிராகரிக்கப் போவதாக அமெரிக்கா மிரட்டியுள்ளது. இஸ்ரேலும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

### மையப்புள்ளியாகும் துருக்கி

அரபுலக நாடுகளின் எழுச்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ள துருக்கி ஈராக்கில் நிலையான அரசியல்வேண்டும் எனக்கோரி வருகிறது. அதோடு லிபியாவுக்கு ஆதரவளித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் தற்போதுதான் துருக்கி ஒரு முக்கிய மையப்புள்ளியாக உருவாகி வருகிறது. அதன் ஜனாதிபதி டாயிப் எர்டோயனை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சந்திக்கவுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எர்டோயன் பாலஸ்தீனத்தின் உறுப்பினர் அந்தஸ்து தனது ஆதரவை உறுதிப்படுத்தத் திட்டமிட்டுள்ளார்.

### லிபியா விவகாரம்

லிபிய அரசு சார்பில் பங்கேற்பதற்கு எதிர்ப்பாளர்களின் இடைக்கால அரசின் பிரதிநிதிகளுக்கு ஐ.நா.ஏற்கனவே அனுமதி அளித்துவிட்டது. இதையடுத்து அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றம் சர்வதேச சமூகத்தில் புதிய லிபிய அரசுக்கு ஆதரவு, முன்னாள் தலைவர் கடாபியைத்தேடும் பணியை முடுக்கி விடுதல் ஆகிய விவாதங்கள் இம்முறை இடம்பெறுகின்றன.

### சிரியா மீது மேலும் தடைகள்

ஏற்கனவே ஐ.நா.,ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா என மூன்று தரப்பும் இணைந்து சில தடைகளை விதித்திருந்தபோதும் தனது மக்கள் மீதான அடக்குமுறையை சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத் கைவிடவில்லை. கடந்த வாரம் ஐ.நா.பொதுச்செயலர் பான் கீ மூன் விடுத்த அறிக்கை ஒன்றில் சிரியாவுக்கு எதிராக சர்வதேச சமூகம் ஒன்று திரளும்படி கோரியிருந்தார். சிரியா மீதான கடுமையான பொருளாதார தடைகளுக்கு ரஷ்யாவும் சீனாவும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் இது குறித்த விவாதம் இந்த முறை இடம்பெறுகிறது.

### தெற்கு சூடான் வன்முறை

புதிய நாடாக அதிகாரபூர்வமாக உதயமாகியுள்ள தெற்குசூடான் இம்முறை முதன்முறையாக ஜ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கிறது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெற்கு சூடான் ஜனாதிபதி சல்வா கிர்ரை சந்திப்பதாகத் தெரிவித்துள்ளார். எனினும் சூடான் மற்றும் தெற்கு சூடான் இடையே நடந்துவரும் சில வன்முறை தாக்குதல்கள் இன்னும் நிற்கவில்லை. இதுகுறித்த விவாதமும் இம்முறை நடக்கவுள்ளது. (4-2)



ஐ.நா.வில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள சவுதி அரேபிய வெளியுறவுத்துறை அமைச்சர் சாவுத் அல்-பைசல் ஐ.நா.தலைவர் பான் கீ முனைச் சந்தித்து பேசுவதைப் படத்தில் காணலாம்.

# பிரிட்டனில் போர்க் குற்றவாளிகளை கைது செய்யும் சட்டத்தில் திருத்தம்

பிரித்தானியாவுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டவர்களை போர்க்குற்றம் தொடர்பாக தடுத்து வைக்கும் சட்டத்தில் அந்நாட்டு அரசாங்கம் தளர்வை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்தின் பழைய சட்ட விதி முறைப்படி அந்நாட்டுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு அரசியல்வாதிகளுக்கு எதிராக போர்க் குற்றம் தொடர்பாக பொதுமகன் எவரும் வழக்குத் தாக்கல் செய்து ஏதாவது ஒரு நீதிமன்றத்தின் ஊடாக கைது உத்தரவை கோரமுடியும்.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம் இது மாற்றப்பட்டுள்ளது. புதிய சட்ட விதிகளின்படி வெளிநாட்டு அரசியல்வாதி ஒருவர் மீதான வழக்குகளின் போது பிடிவிறாந்து பிறப்பிப்பதற்கு முன் சட்டமா அதிபரின் ஒப்புதலை பெறுதல் வேண்டும்.

இதன் காரணமாக அவர் அந்நாட்டுக்கான தனது விஜயத்தை இரத்துச் செய்திருந்தார். ஆனால் தற்போது இச்சட்டம் இஸ்ரேலுக்கு ஆதரவாக திருத்தப்பட்டுள்ளது.

படை அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் எதிராக இங்கிலாந்து நாட்டின் சட்டம் பயன்படுத்தப்படுவதை இது தடுத்து நிறுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் போர்க் குற்றவாளிகளான ஜனாதிபதி உட்பட்ட அரசியல் பிரமுகர்களுக்கும் படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கும் இப்புதிய சட்டம் நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (4-2)

# குற்றப்புலனாய்வு துறை அதிகாரி மீது தற்கொலைத் தாக்குதல்

## 8 பேர் மரணம்; பலர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சியில் மூத்த பொலிஸ் அதிகாரியின் வீட்டில் திங்கட்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் தாய், மகன் உட்பட்ட 8 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த தாக்குதலில் பொலிஸ் அதிகாரி அதிர்ஷ்டவசமாக காயம் எதுவுமின்றி உயர் தப்பினார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 7.30மணிக்கு சக்திவாய்ந்த வெடிப்பொருட்களை வாகனத்தில் ஏற்றி வந்த ஒரு தற்கொலைப் படை பயங்கரவாதி இவரது இரண்டு மாடி வீட்டில் மோதினார்.

இதில் அந்த வீடு இருந்த இடமே தெரியாமல் தரைமட்டமானது.தாக்குதலில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அங்கு பணியில ஈடுபட்டிருந்த பாதுகாப்பு படை வீரர்கள் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தாக்குதல் நடந்த உடனே சௌத்திரியின் குடும்பத்தார் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அல் கொய்தா உள்ளிட்ட பல பயங்கரவாத அமைப்புக்களின் முக்கிய தலைவர்களை சௌத்திரி தலைமையிலான பொலிஸ் படை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள சௌத்திரி, ஏற்கனவே பயங்கரவாத அமைப்புக்களிடம் இருந்து எனக்கு மிரட்டல்கள் வந்த வண்ணம் இருந்தன.

என் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதால் அவர்களின் மிரட்டலுக்கு அடி பணிந்து விடுவேன் என்று நினைத்தால் அது நடக்காது என்றார்.

இதற்கிடையே, பாகிஸ்தானில் இருந்து செயற்படும் தஹ்ரிக் இ தலிபான் அமைப்பு தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளதாக ஜியோ தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரியின் வீடு இருந்த இடத்தில் 10 அடி ஆழம் மற்றும் 25 அடி சுற்றளவுக்கு பெரியபள்ளம்ஏற்பட்டுள்ளதாகஅப்பகுதியை சேர்ந்த பொது மக்கள் தெரிவித்தனர். (4-2)

# பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள கோருகிறார்-ஹிலாரி

பயங்கரவாதிகளுக்கு எதிராகப் பாகிஸ்தான் எடுத்துவரும் நடவடிக்கை குறித்து அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஹினா ரப்பானிகாரிடம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அதிருப்தி தெரிவித்துள்ளார். .

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்றுள்ள ஹீனா ரப்பானியை கிலாரி கிளின்டன் கடந்த ஞாயிற்றுக் கிழமை சந்தித்துப் பேசினார்.

இருவரும் பாகிஸ்தானில் இருந்து செயற்படும் பயங்கரவாதிகள் குறித்தும் அவர்களால் உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்தும் விவாதித்தனர்.

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் லஷ்கர்-இ-தொய்பா, ஹக்கானி ஆகிய இரு பயங்கரவாத அமைப்புகளும் சமீபகாலமாக கடுமையான சேதத்தை ஏற்படுத்த முயல்கின்றன. இதனால் இந்த அமைப்புகளை நசுக்க பாகிஸ்தான் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று ஹிலாரி கேட்டுக் கொண்டார் என்றும் கூறினார்.

மேலும் கடந்த 13 ஆம் திகதி காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது ஹக்கானி அமைப்பினர்தான் தாக்குதல் நடத்தினர் என்று குற்றம் சுமத்திய ஹிலாரி அதற்கான ஆதாரங்களை ஹீனாவிடம் அளித்தார் என்றும் குறிப்பிட்டனர். ஆனால், இதுதவிர வேறு எவ்வித உளவுத் தகவல்களையும் இருவரும் பகிர்ந்து கொண்டார்களா என்பது குறித்து அவர்கள் ஏதும் தெரிவிக்கவில்லை.

ஒப்புக்கொண்டார்....பயங்கரவாதிகளுக்கு எதிராகப் பாகிஸ்தானின் நடவடிக்கை மீது ஹிலாரி அதிருப்தி தெரிவித்ததில் நியாயம் உண்டு என்பதை ஹீனா ரப்பானி புரிந்து கொண்டார் என்றும் தெரிவித்தனர்.

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி அந்நாட்டுக்கு ஒவ்வொரு ஆண்டும் கோடிக் கணக்கான பணத்தை அளித்து வரு கிறது அமெரிக்கா. ஆனால், இந்த நிதியை அந்நாடு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை க்கு எதிராகப் பயன்படுத்தாமல் ஆயுதம் வாங்கிக் குவித்து வருவதாகப் புகார் எழுந்து வருகிறது.

அத்துடன் தமது நாட்டில் உள்ள பயங்கரவாதிகளை பாகிஸ்தான் கண்டு கொள்ளவில்லை என்பது ஒசாமா பின்லேடன் அங்கு இருந்ததன் மூலம் வெளிப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் இத்தகைய போக்கால் அமெரிக்கா கடும் அதிருப்தி அடைந்துள்ளது. (4-2)

# இந்தியாவில் காணாமல் போனவர் குறித்து இதுவரை தகவல் இல்லை

(கொழும்பு)

இந்தியாவுக்கு யாத்திரை சென்றபோது காணாமற்போன இலங்கையர்களில் ஒருவர் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிடுகின்றது.

அவரைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாக பிரதி உயர்ஸ்தானிகர் பாலித கனேகொட தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவிற்கு சென்றிருந்த போது காணாமற் போனவர்களில் மூவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பாலித கனேகொட தெரிவித்தார். இலங்கையிலிருந்து யாத்திரை சென்றவர்களில் காணாமற்போன நால்வரில் ஒருவர் மாத்திரம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இவர் கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# மரமுந்திரிகை இறக்குமதி தடை தற்காலிகமாக நீக்கம்

(கொழும்பு)

மரமுந்திரிகையை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு மரமுந்திரிகை செய்கையாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்ட வகையில் அந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் முந்திரிகைகள் பூரண கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே இறக்குமதி செய்யப்படும் எனவும் விவசாய திணைக்களத்தின் பணிப்பளர் நாயகம் சுட்டிக்காட்டினார். (4-2)

# சிங்கராஜ வீதி தொடர்பில் ஆராய 2 ஆவது குழு நியமனம்

சிங்கராஜ மழைக்காட்டினூடாக வீதி அமைக்கப்படுவது தொடர்பில் வன பாதுகாப்பு திணைக்களம், நில சீர்திருத்த ஆணைக்குழு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு அதனிடம் இப்பிரச்சினையை ஆராய்ந்து சிபாரிசுகளை செய்யும் பொறுப்பு கையளிக்கப்பட வேண்டுமென குறித்த வீதி தொடர்பில் ஆராய்ந்த குழு தெரிவித்துள்ளது.

சுற்றாடல் ஆய்வாளர்கள் மற்றும் வனப் பாதுகாப்பு அதிகாரிகளின் எதிர்ப்பினைத் தொடர்ந்து இந்த வீதியினை அமைக்கும் வேலைகள் நிறுத்தப்பட்டன. சிங்கராஜ வனம் உலக மரபுரிமை சொத்து என்றவகையில் யுனெஸ்கோவினால் சுற்றாடல் அமைச்சிடம் இது தொடர்பில் அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# யாழ்ப்பாணம் மாநகரசபையில் உள்ள வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பிரதேசத்தில் சுகாதார மேம்பாடு கருதி நடமாடும் சேவையொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஈடுபட்டுள்ள யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் மாநகர சபையில் உள்ள வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்பட்டு மக்களுக்கான சேவைகள் வழங்கப்படும். அத்துடன் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான செயற்திட்டத்தினால் நடத்தப்படும் விசேட நடமாடும் சேவை வவுனியா வீரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதன்போது சட்ட ஆவணங்கள், காலங்கடந்த பதிவுகள், பாடசாலை மாணவர்களுக்கான விசேட ஏற்பாடுகள், நிவாரணம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு காணல், இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகள் உள்ளிட்ட பல சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன் கணவனை இழந்த பெண்கள், விசேட தேவையுடையோர்களுக்கான ஏற்பாடுகள், இலவச சட்ட ஆலோசனைகள் மற்றும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றவுள்ள மைத்திரிபால

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் உலகத்தலைவர் மாநாட்டினை முன்னிட்டு சுகாதார அமைச்சர்களின் சர்வதேச மகாநாடு நேற்று அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஆரம்பமாகியுள்ளது. உலகெங்கும் பரவியுள்ள தொற்றாத நோய்களை தடுப்பது தொடர்பிலான நடவடிக்கைகள் குறித்த மாநாட்டின் போது கலந்துரையாடப்படவுள்ளது.

மாநாட்டின் முதல்நாளான நேற்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது கடந்த ஐம்பதாண்டுகளில் தொற்றாத நோய்களை தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை உலக நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் முன்னிலையில் தெளிவுபடுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது. (4-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

குறித்த விலைக்கு அதிகமாக பனடோலை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பெயரில் நபரொருவர் விலைக்கட்டுப்பாட்டுச் சபையால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

★ ★ ★ ★ ★

(சாவகச்சேரி)

கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மிருசுவில் நபர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்யை தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையாலும் ஏற்கனவே இரு வழக்குகளில் தண்டப்பணம் செலுத்தியதையடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (4-12-29

★ ★ ★ ★ ★

(கிளிநொச்சி)

குளிர்பானத்தை குறித்த விலைக்கு அதிகமாக விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் விலைக்கட்டுப்பாட்டுச் சபையினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

# சோளத்தின் தட்டுப்பாடு காரணமாக கோழிகளுக்கான உணவில் பாதிப்பு

## விற்பனையாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

சந்தையில் தற்போது நிலவும் சோளன் தட்டுப்பாடு காரணமாக கோழிகளுக்கான உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கோழிப் பண்ணையாளர்கள் பாரிய சிரமத்தினை எதிர்நோக்கியுள்ளதாக அகில இலங்கை கோழி இறைச்சி விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையை கருத்திற் கொண்டு சோளத்தினை இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று அவர் தெரிவிக்கின்றார்.

இந்தப்பிரச்சினை குறித்து விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில்,

உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்ட சோளத்தை சந்தைப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தார். (4-2)

# 3800 இலங்கை முஸ்லிம்களுக்கு ஹஜ் கடமையை நிறைவேற்ற அனுமதி

## சவுதி அரசாங்கம் வழங்கியது

(கொழும்பு)

முதற்தடவையாக ஹஜ் கடமையை நிறைவேற்றவென செல்பவர்களுக்கே இம்முறை முன்னுரிமை அளிக்கப்படும் என ஹஜ் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் எ.எச். எம். பௌஸி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்லுபவர்களிடம் 3 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கு மேல் கட்டணம் வசூலிக்கப்படும். முகவர் நிலையங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்றவென சவுதி அரேபிய அரசாங்கம் 3 ஆயிரத்து 800 இலங்கை முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

முதலில் 2 ஆயிரத்து 800 இலங்கையர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது என்றாலும் தமக்கும் சவுதி அரேபியாவின் ஹஜ் விவகார அமைச்சருக்குமிடையில் நீண்ட நாட்கள் நிலவும் நட்புறவின் பயனாக மேலதிகமாக ஆயிரம் பேருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

அதனால் முதல் தடவை செல்லுபவர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்.

இந்த 3 ஆயிரத்து 800 பேருக்குரிய கோட்டாவை 110 முகவர்களுக்குப் பகிர்ந்து வழங்கியுள்ளோம். எனினும் தமக்கு வழங்கப்பட்டுள்ள கோட்டாவை எவரும் விற்பனை செய்ய முடியாது. மாறாக வேறொரு முகவர் நிலையத்துடன் சேர்ந்து தமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கும் கோட்டாவுக்குரிய ஆட்களை எடுத்து செல்ல வேண்டும்.

இது இவ்வாறிருக்க இம்முறை இலங்கையிலிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் இலங்கை ஹாஜிகளின் நலன்களுக்கெல்லாம் மக்காவிலும் மதீனாவிலும் இரண்டு அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளன.

இந்த அலுவலகங்கள் கணனிமயப்படுத்தப்படும். சவுதி அரேபியாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்கள் இந்த அலுவலகங்களில் கடமைக்கு அமர்த்தப்படுவர்.

ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் விரைவில் சவுதிஅரேபியாவுக்கு பயணமாகவுள்ளேன்.

அதேநேரம் இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான முதல் குழு செல்லவென அங்கு நான்கு வைத்தியர்களை அனுப்பிவைக்கவும் ஏற்பாடு செய்துள்ளேன் என்றார். (4-2)

உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொடுப்பான். *-நார்மன் வின்சென்ட் வீல்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மூத்த தமிழ் அரசியல் தலைவர் ஆனந்தசங்கரிக்கு ஓர் அன்பு மடல்

அன்புமிகு ஆனந்தசங்கரி ஐயாவுக்கு வணக்கம். தங்களுக்கு கடிதம் எழுதும் நீண்ட கால நினைப்பு இனியும் தாமதிப்பது நல்லதல்ல என்பதால் இக்கடிதத்தை அவசரமாக எழுதுகின்றோம்.

கடிதத்தின் அவசரம் தமிழினத்தின் சமகால நிலைமையை ஒட்டியதே. நீங்கள் இன்று நாடாளுமன்று உறுப்பினராக இருந்திருக்க வேண்டும். என்ன செய்வது! அது நடக்காமல் போய்விட்டது. அதற்குக் காரணம் உங்கள் கட்சியோடு ஒன்றாக இருந்தவர்கள் உங்களுக்கு செய்த சதி என்று நம்பப்படுகின்றது.

இதற்கு மேலாக நீங்கள் யதார்த்தத்தோடு செயற்பட்டீர்கள் என்பதும் உங்களால் எழுதப்பட்ட கடிதங்கள் நியாயமானவை என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

தமிழ் அரசியல் தலைவர்களில் துணிச்சலாகப் பேசக்கூடிய ஆற்றலும் ஆளுமையும் உங்களிடம் அதிகம் உண்டென்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

இருந்தும் விடுதலைப்புலிகளை குறைகூறுவதில் நீங்கள் அதீதமாக செயற்பட்டமையை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் கூறித்தான்ஆகவேண்டும்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை நீங்கள் கண்டித்தீர்களாயினும் மறைமுகமாக அவர்களுக்கு எதிராக எந்த கெடுதியும் செய்யவில்லை என்ற உண்மை உணரப்படுகின்றது.

அதேநேரம் விடுதலைப்புலிகளை மறைமுகமாக வஞ்சித்தவர்கள் வெளிப்படையாக ஆதரித்தனர். அரசியலில் இதுவும் ஒரு தந்திரம் போலும். அதனால் அவர்கள் இப்போதும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவற்றின் விளைவுதான் தமிழ் மக்களின் இன்றைய அவலம்.

பர்வாயில்லை. நடந்தவை - கடந்தவை - முடிந்தவையாக இருக்கட்டும். இப்போது தமிழ் மக்களுக்கு அவசரமான தேவை எங்கள் அரசியல் தலைமைகளின் போக்குபற்றிய விளக்கமாகும்.

எங்கள் அரசியல் தலைமைகள், சரியான பாதையில் பயணிக்கின்றனவா என்பதை நீங்கள் அறியாமல் - உணராமல் இருக்கமுடியாது.

எனவே அரசியல் கட்சி என்ற எல்லை கடந்து தமிழ் அரசியல் தலைமைகளின் நிலைப்பாட்டை விளக்குகின்ற பணியை முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

தமிழ்மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கும் இவ்வேளையில், எங்களை ஏமாற்ற 'ஓநாய்கள்' காத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில்,

எங்கள் தமிழ் மக்களை காப்பாற்ற வியூகம் அமைப்போம். அதில் உங்களைப் போன்றவர்களின் அரசியல் அனுபவப்பகிர்வு மிகவும் அவசியம். அதனை நீங்கள் செய்வீர்கள் என்று நம்புகின்றோம்.

# கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 100 வீடுகள் கையளிப்பு

(கிளிநொச்சி)

யு.என்.ஹபிற்றற் திட்டத்தின்கீழ் அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 100 வீடுகள் நேற்று செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலியாவின் இலங்கைப் பிரதிநிதியால் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த நிலையில் காணியில்லாது வறுமைக் கோட்டின்கீழுள்ள குடும்பங்களுக்கே இவ்வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

இவ்வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஒரு குடும்பத்திற்கு 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதுடன் அரச காணிகளும் வழங்கப்பட்டு குடும்பத்தினரின் மேற்பார்வையின்கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த வீடுகளின் கட்டட நிர்மாண வேலைகள் கடந்த 6 மாதத்திற்கு முன் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர், அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-3)

# குறைந்த வருமானம் பெறுவோரை அரசாங்கம் வெளியேற்றாது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு நகரில் வாழ்கின்ற குறைந்த வருமானமுடைய மக்களை வீடுகளில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையை அரசாங்கம் அமுல்படுத்த மாட்டாதென நிர்மாணத்துறை பொறி யியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மாற்றுத் திட்டமான மாடிவீட்டுக் கட்டமைப்பை நிர்மாணித்த பின்னரேயன்றி மக்களை வீடுகளில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சபையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ச இந்த விடயத்தைக் கூறினார்.

கொழும்பு நகரில் வாழ்ந்து வரும் குறைந்தவருமானம் பெறுகின்ற மக்கள் சுமார் 65 ஆயிரத்து 800 பேரின் வீடுகள் இடித்து அகற்றப்படுவது ஏன் என்று இதன்போது ரவி கருணாநாயக்க வினவினார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)

# மிகவிரைவில் ஊரணியில் மீள்குடியேற்றம்!

(யாழ்ப்பாணம்)

ஊரணியில் மிக விரைவில் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்படுவார்கள் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். மாவட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் நீண்ட காலமாக இருந்து வரும் ஊரணிப் பிரதேசத்தில் மிகவிரைவில் மக்கள் மீள்குடியேற்றப் படவுள்ளனர்.

யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவுடன் பலாலி படைத்தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது ஊரணிப் பிரதேசத்தை மிகவிரைவில் மக்கள் பாவனைக்கு விட தாம் தயாராகவுள்ள தாகவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் உறுதிபட கட்டளைத் தளபதி தெரிவித்ததாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (எ-6)

# வழிகாட்டல் கருத்தரங்கு

தலைமைத்துவப் பயிற்சியும், வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டல் கருத்தரங்கு நிகழ்வு இன்றிலிருந்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை பல்வேறு இடங்களில் நடத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கு இன்று 21 ஆம் திகதி புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் 22 ஆம் திகதி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் 23 ஆம் திகதி வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திலும் 24 ஆம் திகதி உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் நடத்தப்படவுள்ளது.

மானிப்பாய் பரீஸ் லயன்ஸ் கழகத்தின் சமூக முன்னெடுப்பில் யூனியன் அஷ்யூரன்சின் அனுசரணையுடன் நடத்தப்படும். இக்கருத்தரங்கில் க.பொ.த. உயர்தரம் முடித்த மாணவர்கள், பட்டதாரி இளைஞர்கள், ஓய்வு பெற்றவர்கள், பகுதிநேர வேலை வாய்ப்பைபெற விரும்புவோர் கலந்து கொண்டு பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

# தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய சோனியா நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வைகோ கோரிக்கை

(வேலூர்)

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒட்டுமொத்த தமிழகத்தின் வேண்டுகோளாக ஏற்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் மத்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ம.தி.மு.க. செயலர் வைகோ கூறினார்.

வேலூர் மத்திய சிறையில் உள்ள சாந்தன், முருகன், பேரறிவாளனன் ஆகியோரை கடந்த திங்கட்கிழமை சந்தித்துத் திரும்பிய வைகோ நிருபர்களிடம் கூறுகையில்,

தூக்குத் தண்டனைக் கைதிகள் மூவரின் உயிரைக் காப்பாற்ற முதல்வர் வரலாறு படைக்கும் தீர்மானத்தை சட்டப் பேரவையில் நிறைவேற்றியுள்ளார். 8 வாரத்துக்குதூக்குத்தண்டனைக்கு தடை உத்தரவை சென்னை உயர்நீதி மன்றம் விதித்துள்ளது.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒட்டுமொத்த தமிழகத்தின் வேண்டுகோளாக ஏற்று காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியும், மத்திய அரசும் இவர்களின் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். குடியரசுத் தலைவர் கருணை மனுவை நிராகரித்திருந்தாலும்கூட மீண்டும் மனுவை அவர் மறுபரிசீலனை செய்வதில் சட்டத்தில் எவ்விதத் தடையும் இல்லை என்றார். (4-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## சிரத்தை [ஈடுபாடு]

இளமை முதற்கொண்டே கனன்று எரியும் நெருப்பினைப்போல்சுடர் வீசும் பண்பாளர்களுடன் பழகி வரவேண்டும். உன்னத போதனைக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருபவரைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தூய பிரமச்சரிய வாழ்க்கையை மேற்கொள்ள பயிற்றுவிக்கப்படவேண்டும்.

அப்போதுதான் ஒருவனிடத்து தன்னம்பிக்கையையும் சிரத்தையும் எழும்பும். மாபெரும் தியாகிகளே நம் நாட்டில் கல்வி போதித்து வந்தனர். இராமாயணம், மகாபாரதம், உபநிடதங்கள் முதலான புனித நூல்களிலிருந்து கதைகளைத்தொகுத்து எளிய நடையில் புரியும்படியாக நூல் வடிவில் தம் சிறார்களுக்கு வழங்கவேண்டும்.

அதிகாரம், பதவி போன்றவை தாமாகவே தேடி வரும். நீங்கள் உழைப்பைப் பயன்படுத்துங்கள். அப்போது தாங்கமுடியாத அளவிற்கு உங்களிடம் ஆற்றல் பெருகி வருவதைக் காண்பீர்கள். பிறருக்குச் செய்யும் அற்பசேவைகூட உங்களிடம் பேராற்றலை விழிப்புறச் செய்யும். நாளாவட்டத்தில் உங்கள் மனம் சிங்கத்தை ஒத்த ஆற்றலைப் பெறும்.

உங்கள் அனைவரையும் நான் வெகுவாக நேசிக்கிறேன். அதேநேரத்தில் பிறருக்காகப் பாடுபடவும் அதற்காக இறப்பை மேற்கொள்ளவும் நீங்கள் தயாராக இருக்கவேண்டும் என்பேன். நீங்கள் அப்படி உலகத்திற்காக மடிவதையே நான் இன்பமாகக் கொள்வேன்.

# இலவசப் பொருள் விநியோகத்துக்காக உள்ளாட்சித்தேர்தல் தாமதமாகிறது



## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

இலவசப் பொருட்கள் விநியோகத்துக் காக உள்ளாட்சித் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதில் மாநில தேர்தல் ஆணையகம் தாமதம் செய்து வருவதாக தி.மு.க தலைவர் கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

உள்ளாட்சி அமைப்புக்களில் மகளிர் தனித் தொகுதிகளுக்கான இடங்கள் அறிவிக் கப்படுவதற்கு முன்பே அ.தி.மு.க வேட்பாளர் பட்டியலை அறிவித்துள்ளது. அனைவருக் கும் பொதுவாக அறிவிக்க வேண்டியதை ஆளும்கட்சிக்கு மட்டும் தேர்தல் ஆணையகம் தனியாகத் தெரிவித்திருக்கின்ற போதிலும் இதற்கு தி.மு.க எதிர்ப்பு தெரிவித்ததுடன் அவசர அவசரமாக தனித் தொகுதிக்கான இட ஒதுக்கீடு பட்டியல் அரசின் சார்பில் வெளி யிடப்பட்டுள்ளது.

இலவசப் பொருட்கள் விநியோகம், ஆசி ரியர் இடமாறுதலுக்கான கவுன்சிலிங் ஆகிய வற்றை முடித்துவிட்டு தேர்தல் திகதியை அறிவிக்கலாம் என்ற மேலிடத்தின் உத்த ரவை நிறைவேற்றுவதற்காக உள்ளாட்சி தேர்தல் திகதி அறிவிப்பில் தாமதம் செய்கி றார்கள் என்று கூறப்படுகிறது.

2008 இல் அண்ணா நூற்றாண்டு விழா வையொட்டி 7 ஆண்டு தண்டனை முடிந்த ஆயுள் தண்டனைக் கைதிகளும் 60 வயதுக் குட்பட்ட 5 ஆண்டு தண்டனை அனுபவித்த வர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

அந்த அடிப்படையில் இந்த ஆண்டு 400 இற்கு அதிகமான கைதிகள் தாங்கள் விடுதலையாவோம் என எதிர்பார்த்து ஏமாற் றம் அடைந்திருப்பதாக செய்தி வந்துள்ளது. வெளியில் இருப்பவர்களை உள்ளே அனுப் பும் அ.தி.மு.க அரசு உள்ளே இருப்பவர்களை எங்கே விடுவிக்கப் போகிறார்கள்?

குஜராத் முதல்வர் நரேந்திரமோடியின் பதவி ஏற்பு விழாவில் ஜெயலலிதாவும் ஜெய லலிதாவின் பதவியேற்பு விழாவில் நரேந் திரமோடியும் கலந்து கொண்டனர். ஆனாலும் அ.தி.மு.க கூட்டணியில்தான் மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி இருக்கிறது. இந்நிலையில் மோடி யின் உண்ணாவிரதத்தை சீதாரம்யெச்சூரி கண்டிப்பது ஆச்சரியமாக உள்ளது என்று கரு ணாநிதி அறிக்கையில் கூறியுள்ளார். (4-2)

# கட்சிகளுக்கு வழங்கப்படும் நிதியை கண்காணிக்க சிறப்பு புலனாய்வு பிரிவு



(சென்னை)

அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் நன்கொடைகளை நடைமுறைப் படுத்த சிறப்பு புலனாய்வுப்பிரிவு ஒன்றை மத்திய நிதி அமைச்சகம் அமைத்துள்ளது.

இப்பிரிவுக்கு மத்திய நிதி அமைச்சர் பிர ணாப் முகர்ஜி சமீபத்தில் ஒப்புதல் அளித்தார். இப்புதிய பிரிவு மத்திய நேர்முகவரிகள் வாரி யத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும்.

வருமான வரித்துறையின் கிரிமினல் புல னாய்வுப் பிரிவு, வரி ஏய்ப்புத்தடுப்புப்பிரிவு, உட்பட மூன்று சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இதுதவிர விசாரணை பிரிவு- 4 என்ற அமைப் பும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு வரி செலுத்துவோர் தொடர் பான விபரங்களை கண்காணிக்கும் இதன் தொடர்ச்சியாக விசாரணை பிரிவு-5 என்ற சிறப்பு புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட் டுள்ளது.

வருமான வரித்துறையில் குழு அந்தஸ் தில் பணியாற்றும் அதிகாரியின் கீழ் செயற் படும் இந்த சிறப்பு பிரிவானது தேர்தல் தொடர்பான செலவுகளை கண்காணிப் பதோடு அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் நன்கொடைகளையும் முறைப் படுத்தும்.

வரி தொடர்பான விதிகளுக்கு கட்டுப்பட்டு அரசியல் கட்சிகள் நடப்பதை உறுதி செய்யும். இல்லையெனில் அதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளும். அத்துடன் தன் அறிக் கையை மத்திய நேர்முக வரிகள் வாரியத்தின் தலைவரிடம் சமர்ப்பிக்கும். (4-2)

# 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை வழக்கின் சட்ட அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவு

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் சட்ட அமைச்சரகத்தின் அறிக்கையை இன்று புதன்கிழமை தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐ.க்கு டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக் கீட்டில் நடந்த ஊழல் பற்றி டில்லியில் உள்ள சி.பி.ஐ நீதிமன்றம் விசாரணை நடத்தி வரு கிறது. 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக் கீடு பெற்ற சுவான் டெலிகாம் நிறுவனத்தின் கட்டுப்பாடு பின்னர் ரிலையன்ஸ் டெலிகாம் மூலம் சாகித் உஸ்மான் பல்வாவுக்கு மாற் றப்பட்டது.

இந்த நிலையில் சுவான் டெலிகாம் ரிலை யன்ஸ் டெலிகாம் நிறுவனத்தின் ஒருங்கி ணைந்த நிறுவனம் அல்ல என்பது தொடர் பாக பிரச்சினை எழுந்தது. இதைத் தொடர்ந்து இது தொடர்பான விதிமுறைகள் பரிசீலிக் கப்பட்டன.

இந்தப்பிரச்சினை தொடர்பாக இந்த வழக் கில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் தொலைத் தொடர்பு துறை மந்திரி ஆ.ராசா உள்ளிட்டோர் சார்பில் தனி நீதிமன்றில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் 2ஜி ஸ்பெக்ட்ரம் உரிமம் பெற்ற சுவான் டெலிகாம் நிறுவனம் இணைப்பு குறித்து தொலைத் தொடர்பு துறை மத்திய சட்ட அமைச்சகத்துக்கு வழங்கிய அறிக்கையை தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐ க்கு உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த வழக்கில் நீதிபதி ஓ.பி.சைனி முன் னிலையில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சட்ட அமைச்சகத்தின் அறிக்கையை தாக்கல் செய் யுமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு சி.பி.ஐ சார்பில் ஆஜரான சட்டத்தரணி எதிர்ப்பு தெரிவித்தார். சட்ட அமைச்சகத்தின் அறிக் கையை தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐ. யை நிர்ப்பந்திக்க முடியாது என்றும் குற்றம் சாட் டப்பட்டவர்கள் விருப்பப்பட்டால் அந்த அறிக் கையை தொலைத்தொடர்பு துறையிடம் இருந்தோ அல்லது சட்ட அமைச்சகத்திடம் இருந்தோ கேட்டு பெறலாம் என்றும் கூறி னார். (4-2)

# பாரதச் செய்திகள்

# பத்மநாபசுவாமி கோவிலின் வரலாறு திரைப்படமாக உருவெடுக்கின்றது

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் பொக்கிஷங்கள் மற்றும் திருவாங்கூர் மன் னர் மார்த்தாண்டவர்மாவின் வரலாறு ஆங்கி லம், மலையாளத்தில் பிரமாண்ட சினிமாவாக எடுக்கப்படுகிறது. கேரள மாநில திருவனந்த புரத்தில் உள்ள பத்மநாப சுவாமி கோயிலில் பாதாள அறைகள் இருப்பதும் அவற்றில் குவியல் குவியலாக தங்கம், வெள்ளி, மற்றும் நவரத்தின நகைகள் இருப்பதும் கடந்த ஜூன் மாத கடைசியில் அம்பலமானது.

உச்சநீதிமன்ற உத்தரவின்படி இதற்காக அமைக்கப்பட்ட குழுவினர் முன்னிலையில் பலத்த பாதுகாப்புடன் பாதாள அறைகள் ;திறக்கப்பட்டன. அறைகளில் ஏராளமான தங்க நகைகள், வைரம், வைடூரியம், பவளம், வெள்ளி இருப்பது தெரிந்தது. இதன் மதிப்பு ரூ.1.5 இலட்சம் கோடியை தாண்டும் என்று கூறப்படுகிறது.

அதன் தொல்லியல் முக்கியத்துவத்தை கணக்கில் கொண்டால் மதிப்பு ரூபா 5 இலட் சம் கோடிக்கு மேல் இருக்கும் என்றும் கூறப் பட்டு வருகிறது. இந்நிலையில் கி.பி 1729 முதல் 1758 வரை திருவாங்கூர் மன்னராக இருந்த அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்மாவின் வாழ்க்கை வரலாற்றை டூபாயை சேர்ந்த நிறுவனம் சினிமாவாக தயாரிக்கிறது.

படத்தின் பெயர் மார்த்தாண்டவர்மா கவி ஞர், பாடலாசிரியர் கே.ஜெயகுமார், ஸ்கிரிப்ட் எழுதுகிறார். கன்னல் கிரீடம் என்ற படத்தை இயக்கிய கே.ஸ்ரீகுமார் டைரக்ட் செய்கிறார்.

ஹொலிவுட் படங்களுக்கு இணையாக இப் படம் உருவாகிறது. மன்னரின் வரலாற்று சாதனைகள், ஆட்சிச் சிறப்பு, பத்மநாப சுவாமி கோயிலில் சொத்துக்கள் குவிந்த வரலாறு ஆகியவற்றை மையமாக கொண்டு சினிமா தயாரிக்கப்படுகிறது. நடிகர், நடிகை தேர்வு தீவிரமாக நடக்கிறது. (4-2)

# சிக்கின் நிலநடுக்கத்தில் பலியானோருக்கு உதவி

## மன்மோகன்சிங் தெரிவிப்பு

வடக்கு கிழக்கு மாநிலமானது சிக்கிம் தலைநகர் கேங்டாக்கிலிருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள சிக்கிம் -நேபாளம் எல் லையை மையமாக கொண்டு நேற்று முன் தினம் மாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதில் 40 பேர் பலியானார்கள். 100 க்கு மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். இதனை தொடர்ந்து நிலநடுக்கத்தால் பாதிக் கப்பட்ட இடங்களுக்கு இராணுவம், 5 ஆயிரம் படை வீரர்கள் மற்றும் 9ஹெலிகொப்டர் களை அனுப்பி உள்ளது. மீட்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நிலநடுக்கத்தினால் உயிரிழந்த வர்களின் குடும்பத்துக்கு ரூபா 2 இலட்சமும் காயமடைந்தவர்களுக்கு ஒரு இலட்சமும் வழங்கப்படும் என பிரதமர் மன் மோகன் சிங் அறிவித்துள்ளார். (4-2)





சிக்கிம்மில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக வீதிகளில் ஏற்பட்டுள்ள விரிசல்களை ஆராயும் இராணுவ அதிகாரிகளைப் படத்தில் காணலாம்.

# மூன்றாவது டெஸ்ட் சமநிலையில் முடிவு;

# வோர்ன்-முரளிதரன் வெற்றிக்கிண்ணம் ஆஸி.வசம்

(கொழும்பு)

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந் தது.

இதன் மூலம் வோர்ன் – முரளிதரன் வெற் றிக்கிண்ண டெஸ்ட் தொடரை அவுஸ்திரே லிய அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றி யது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்த அவுஸ்திரேலிய அணி 2 இருபது - 20, 5 ஒருநாள், 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் இருபது-20 தொடரை இலங்கை அணி 2:0 என்ற கணக்கிலும் ஒருநாள் போட்டித்தொடரை அவுஸ்திரேலிய அணி 4:1 என்ற கணக்கிலும் கைப்பற்றியது.

இந்நிலையில் தொடர்ந்து நடைபெற்ற வோர்ன் – முரளிதரன் வெற்றிக்கிண்ண மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலா வது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றதுடன் இரண்டாவது போட்டி சமநிலை யில் முடிபடைந்தது.

இத்தொடரின் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 16ஆம் திகதி கொழும்பு எஸ். எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.




இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தா டிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன் னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 316 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 473 ஓட்டங் களை எடுத்தது.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலை வகித்த அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன் தினம் நான்காம் நாள் ஆட்ட நேரமுடிவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஐந்தாவதும் இறுதிநாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரே லிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்க்களையும் இழந்து488 ஓட்டங் களை குவித்தது.

இதில் ஹக்ஸ் 220 பந்துகளில் (16 பவுண்ட ரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 126 ஓட்டங்களை யும்அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 178 பந்துகளில் (14 பவுண்டரிகள், 3 சிக்ஸர் உட்பட) 112 ஓட்டங்களையும் மைக்கல் ஹசி 138 பந்துகளில் (11 பவுண்டரிகள் ஒரு சிக்ஸ்சர் உட்பட) 93 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் ரங்கண ஹேரத் 52 ஓவர்கள் பந்து வீசி 157 ஓட்டங்களை கொடுத்து 7 விக் கெட்டுகளையும் எரங்கா, வெலகெதர, டில்சான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் இலங்கை அணி இரண்டா வது இன்னிங்ஸில் 332 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாட களமிறங் கியது.

எனினும் ஆட்டம் நிறைவடைய 15 ஓவர் கள் மட்டுமே இருந்தநிலையில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களை எடுத்த நிலையில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்ததாக அறிவிக்கப் பட்டது.

இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட வோர்ன் - முரளிதரன் வெற்றிக் கிண்ண டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இப்போட்டியில் முதலாவது இன்னிங் ஸில் 118 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 93 ஓட்டங்களையும் எடுத்து அசத்திய மைக்கல் ஹசி ஆட்டநாய கனாக தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை யும் வென்றார்.

இத்தொடரில் மைக்கல் ஹசி மூன்று போட்டிகளில் (5 இன்னிங்ஸில்) 463 ஓட்டங் களை (சராசரி 92.60) குவித்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

## தனித்திருந்த...

வந்த மர்ம நபர் வீட்டில் இருந்தவர்களை அழைத்தபோது பிரஸ்தாப பெண் வெளியே சென்றுள்ளார்.

கறுப்புத் துணியை தலையில் கட்டிய வாறு கறுப்புக் கண்ணாடி அணிந்து சென்ற அந் நபரின் உருவத்தில் சந்தேகம் ஏற்பட்டு அப் பெண் கூக்குரல் இடமுற் பட்டபோது அப் பெண் கழுத்தில் அணிந்திருந்த நகையை மர்ம மனிதன் அறுக்க முற்பட்டுள்ளார்.

அதனை தடுக்க முயன்ற பிரஸ்தாப யுவதியின் இரண்டுகைகளையும் இரும்புக் கம்பியினால் கீறி காயங்களை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதன் போது குறித்த பெண் கூக்குரலிட்ட தனால் அயலவர்கள் திரண்டு துரத்தவே பக்கத் திலிருந்த பாவனையற்ற வீட்டினுள் நுழைந்து அதனூடாக தப்பியோடியுள்ளான்.

இதனையடுத்து அயலவர்கள் அவ்வீட்டி னுள் நுழைந்து பார்த்தபோது பாய், தண் ணீர்ப் போத்தல்கள், கையடக்கத் தொலை பேசி என்பன அங்கு காணப்பட்டதாக தெரிவி கப்படுகின்றது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-5,6,12,26)

# ஐ.பி.எல். அமைப்பிலிருந்து கொச்சி அணி அதிரடி நீக்கம்

விதிகளை மீறிய கொச்சி தஸ்கர்ஸ் கேரளா அணி ஐ.பி.எல். அமைப்பிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டது. இதையடுத்து ஐ.பி.எல் அணி களின் எண்ணிக்கை 9ஆக குறைந்தது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப் பில் கடந்த ஆண்டு சேர்ந்தது கொச்சி தஸ் கர்ஸ் கேரளா. ரூ.ஆயிரத்து 550 கோடிக்கு (இந்திய ரூபாயில்) வாங்கப்பட்டது. கொச்சி அணி இத்தொகையை 10 ஆண்டுகளில் செலுத்த வேண்டும் என்பது விதி. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.153 கோடி செலுத்த வேண்டும்.




டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 100ஆவது போட்டியில் விளையாடிய இலங்கை அணி யின் நட்சத்திர வீரர் குமார் சங்கக்காரவுக்கு ஐ.சி.சியின் நிறைவேற்று அதிகாரி நினைவுப் பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

இதனிடையே கொச்சி அணி ஆரம்பத் தில் இருந்தே பல்வேறு பிரச்சினைகளில் சிக் கித் தவித்தது.

அணி உரிமையாளர்கள் யார் என்று சொல் வதில் ஆரம்பமாகியது முதல் பிரச்சினை. இது குறித்து அப்போதைய தலைவர் லலித்மோடி மத்திய அமைச்சர் சசிதரூர் இடையே மோதல் வெடித்தது. இதில் இருவரது பதவிகளும் பறி போனது. பின் அணியை நிர்வகிப்பதில் மோதல் ஏற்பட்டது. அடுத்து ஒப்பந்தத்தின் படி நடக் கவிருந்த 18 போட்டிகளை ஐ.பி.எல் நிர்வாகம் 14 ஆக குறைத்தது.

இதனால் தங்கள் உரிமத் தொகையில் 25 சதவீதம் குறைக்க வேண்டும் என கொச்சி அணியுடன் சேர்ந்து, புனேயும் கோரிக்கை விடுத்தது.

இதை பி.சி.சி.ஐ நிராகரித்தது. ஒரு வழி யாக சமாதானமாகி கடந்த ஐ.பி.எல். தொட ரில் கொச்சி அணி பங்கேற்றது.

இந்நிலையில் இந்த ஆண்டு செலுத்த வேண்டிய தொகையை கொச்சி அணியினர் இன்னும் தராமல் இழுத்தடித்து வந்தது. இதையடுத்து கொச்சி அணி ஐ.பி.எல். அமைப்பில் இருந்து அதிரடியாக நீக்கப்பட் டது. இதையடுத்து ஐ.பி.எல் அணிகளின் எண்ணிக்கை 9 ஆக குறைந்தது.

இது குறித்து பி.சி.சி.ஐ தலைவர் சீனிவாசன் கூறியதாவது,

வழக்கமாக செலுத்த வேண்டிய தொகை யை தராமல் கொச்சி நிர்வாகிகள் விதிகளை மீறி செயற்பட்டனர். சரி செய்ய முடியாத அள விற்கு விதிகளை மீறியுள்ளனர். இதனால் கொச்சி அணியின் உரிமம் இரத்து செய்யப் படுகிறது. மீண்டும் அவர்களுக்கு வாய்ப்பு கொடுப் பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இதையடுத்து அவர்கள் ஏற்கனவே செலுத் தியிருந்த வங்கி உத்தரவாத தொகையை இழப்பீடாக பி.சி.சி.ஐயை எடுத்துக் கொள்கிறது.

கொச்சி அணிக்கு பதிலாக புதிய அணி யைச் சேர்ப்பது, இதற்காக புதிதாக ஏலம் நடத்துவது உட்பட எவ்வித முடிபும் ராஜிவ் சுக்லா தலைமையிலான ஐ.பி.எல் கட்டுப் பாட்டுக் குழு முடிபுசெய்யும். இவ்வாறு சீனி வாசன் கூறினார்.

### கொச்சி எதிர்ப்பு

பி.சி.சி.ஐயின்இந்த முடிபுக்கு கொச்சி அணி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அணியின் இயக்குநர் முகேஷ் படேல் கூறுகையில்,

பி.சி.சி.ஐக்கு நாங்கள் எந்த கொடுப் பனவும் செலுத்த வேண்டியில்லை. உண்மை யில் ஆண்டு வருவாயில் ரூ. 12 முதல் 15 கோடி வரை அவர்கள்தான் அடுத்த மாதம் எங்களுக்கு தரவேண்டியது உள்ளது.

இந் நிலையில் எங்கள் ஒப்பந்தத்தை இரத்து செய்வது சட்டவிரோதமானது. இதை எதிர்த்து நாங்கள் நீதிமன்றில் முறையிடு வோம் என்றார்.

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
யாழ்ப்பாணம்
aramex
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

# வட மாகாணப் பாடசாலை...

மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் உட்பட கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டிலேயே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் 125 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இத்திட்டத்தின் மூலம் 400 ஊட்டப் பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இவ் அபிவிருத்தித் திட்டத்திற்கான நிதி அடுத்த ஆண்டு வழங்கப்படும். இதன் மூலம் 2012இல் வட மாகாணப் பாடசாலைகள் பாரிய அபிவிருத்தியைக் காணும். அத்துடன் தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும்.

தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான முகாமைத்துவத்தினை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு முன்னெடுக்கும்.

மேலும் பல்கலைக்கழகங்களில் உடற்கல்வி டிப்ளோமா முடித்தவர்களுக்கு விசேட திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை நாட்டின் சகல மாவட்டங்களையும் ஒரே மாதிரியாக அபிவிருத்தி செய்வதே ஜனாதிபதியின் நோக்கம். தென் பகுதி என்றோ, வடபகுதி என்றோ அவர் வேறுபாடு காட்டமாட்டார்.

யாழ். மாவட்டத்திலிருந்து கடந்த காலங்களில் பல அறிஞர்களும் விஞ்ஞானிகளும் சட்டத்தரணிகளும் உருவாகியுள்ளனர். எமது நாட்டின் பல பாகங்களிலும் அவர்கள் பணி புரிந்துள்ளனர்.

அத்தகைய அறிவுசார் சமுதாயம் யாழ். குடாநாட்டிலிருந்து உருவாகி இருந்தது.

இந்தநிலை மறுபடியும் உருவாக்கப்பட வேண்டும். யாழ். மாவட்டத்தை இந்தியாவின் ஹைதராபாத் நகரைப் போன்று அறிவியல் ரீதியிலும் விஞ்ஞான ரீதியிலும் சிறந்து விளங்கக் கூடியதாக உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வட மாகாணத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகளை இரண்டாம் தரப் பாடசாலைகளுக்குள் உள்வாங்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதில் 400 ஆரம்ப பாடசாலைகள் உள்ளடங்குகின்றன என்றார். (ச-5,6)

# அமெரிக்காவுக்குச்... ...

இதேவேளை ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நியூயோர்க்கிற்கு வெளியே செல்ல வேண்டாமென்று அமெரிக்க ராஜதந்திரிகள் அறிவுறுத்தியுள்ளதாக ஆங்கில இணைய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நியூயோர்க்கிற்கு வெளியில் ஏனைய மாநிலங்களுக்கு செல்வதால் போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படக்கூடும் என்பதாலேயே ஜனாதிபதியை அங்கிருந்து வெளியே செல்ல வேண்டாம் என்று அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐ.நா.பொதுக்கூட்டத்தில பங்கேற்கும் ராஜதந்திரிகளுக்கு நியூயோர்க்கில் மட்டுமே இராஜதந்திரப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது உறவினர்களை சந்திப்பதற்கும் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளவும் அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தார்.

அமெரிக்க அதிகாரிகளின் ஆலோசனையினால் அவரது திட்டங்கள் கைவிடப்பட்டு நியூயோர்க்கில் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆங்கில ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (எ-1)

# புலிகள் மேற்கொண்ட... ...

தெரிவித்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, முப்பதாண்டு காலமாக இடம்பெற்ற போரின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் அழிவுகளுக்கு விடுதலைப் புலிகள் காரணமாக இருந்துள்ளதாக கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய அடேல் பாலசிங்கமும், உருத்திரகுமாரனும் மேற்கத்தைய நாடுகளில் சுதந்திரமாக நடமாடி வருவதாகவும் இச் சந்திப்பின் போது அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அடேல் பாலசிங்கம் பிரித்தானியாவிலும், உருத்திர குமாரன் அமெரிக்காவிலும் வாழ்ந்து கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி தனிநாடு அமைப்பதற்கான பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாகவும் சவேந்திர சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

போரின் போது அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர்களை முப்பதாண்டு கால வன்முறைகளுக்கு பொறுப்புக் கூற வைக்க முடியாது. இந்நிலையில் வெளிநாடுகளில் வாழ்கின்ற விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துமாறு அந்தந்த நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்குமாறு மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதிநிதிகளிடம் அரசாங்க பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

உண்மைகளை கண்டறிவதற்கான நல் லிணக்க ஆணைக்குழுவின் இடைக் கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என இதன்போது மனிதவுரிமைகள் கண் காணிப்பகத்தின் பிரதிநிதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். இக்குற்றச்சாட்டை நிராகரித்த பாலித ஹேரோகன, காணி விவகாரங்கள் மற்றும் மரண சான்றிதழ் வழங்கும் விவகாரங்கள் குறித்து சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து எடுத்துக் கூறியதுடன் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை முன்னேற்றமான நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளார். (எ-5)

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லரி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134
(சி-4418)

# ஜனாதிபதி மகிந்த... ...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனை நேற்று சந்தித்தார். இச் சந்திப்பில் மனித உரிமை மீறல், மீள் குடியேற்றம் மற்றும் நிலக் கண்ணிவெடி அகழ்வு போன்ற விடயங்கள் குறித்து பேசப்பட்டிருக்கலாம் என ஊடகங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

சர்வதேச ரீதியான சவால்களை எதிர்நோக்குவதற்கு உலகத்தலைவர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் கிளின்டன் க்ளோபல் இனிஷேடிவ் போரம் என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

இலங்கையில் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட காலத்தில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளதுடன் அமைப்பின் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் பில் கிளின்டன் ஊடாக ஐநாவின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தான் பேசிக் கொள்வதாக ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார். (ச-5)

# ஜெனிவாவில்... ...

கலைக் கல்லூரி மாணவர்களின் இன்னியம் நிகழ்வு மற்றும் தேசிய அணிநடை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரால் வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலை நடவடிக்கையை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் தன்னை தீயுடன் ஆகுதியாக்கி கொண்ட ஈகப் பேரொளி முருகதாஸன் உட்பட தமிழகத்தில் ஈழத்தமிழர்களின் விடுதலைக்காக உயிர் தியாகம் செய்தோரின் ஈகச் சுடரொளி ஏற்றல் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வைத் தொடர்ந்து பல நாடுகளில் இருந்தும் சென்றிருந்த மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சகோதர இனப் பிரமுகர்கள் பொங்கு தமிழ் நிகழ்வின் நோக்கம் குறித்தும் தமிழ் மக்களுக்கான தமது ஆதரவு குறித்தும் தமிழிலும் ஏனைய மொழிகளிலும் உரையாற்றினர். (ச-5)

# சட்டத்தரணிகள்... ...

கோப்பாய் பொலிஸார் நீதிமன்ற வளாகத்தில் வைத்து தாக்கியதால் சந்தேக நபர் தரப்பு சட்டத்தரணி ஒரு பிரேரணை மூலம் நீதவானுக்கு விளங்கப்படுத்தியுள்ளார்.

இப் பிரேரணையை பார்வையிட்ட நீதவான் தாக்கப்பட்ட நபரை மருத்துவமனையில் சேர்த்த பின் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென உத்தரவிட்டார்.

இவ் உத்தரவின் பின்னரும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடுவதன் காரணம் நீதிமன்ற வளாகத்திற்குள் பிணையில் விடுவிக்கப்பட்ட நபரை தாக்கிய சம்பவம் நீதிமன்றத்தையும், நீதிபதியையும், சட்டத்தரணிகளையும், நீதித் துறையையும் அவமதிக்கும் செயல். எனவே நீதியைக் காப்பாற்ற பணிப்புறக் கணிப்பில் ஈடுபடுகின்றோம்.

இக் குற்றச் செயலில் ஈடுபட்ட ஏழு பொலிஸாரையும் தற்காலிக பதவி நீக்கம் செய்யும்வரை பணிப்புறக்கணிப்பு இடம்பெறுமென கூறியுள்ளார். (ச-9)

பதிவுகள் நடைபெறுகிறது NIBM
அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்
Certificate in Compueter Science
(Week days / week ends)
Adv. Certificate in English Language
(Week days / week ends)
&
Certificate in Business Management
(Week days)
077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna

IBM
3.2 HT LGA Processor
1 GB DDR2 RAM
DVD Combo
80GB HDD
256 MB VGA
16,500/=
1 Year Warranty
Original Windows XP

IBM
3.0 HT LGA Processor
512 MB DDR2 RAM
DVD Combo
40GB HDD
128 MB VGA
13,500/=
1 Year Warranty
Original Windows XP

ACER
2.8 Ghz PGA Processor
512 MB DDR RAM
DVD Combo
80GB HDD
128 MB VGA
Tower Casing
13,000/=
1 Year Warranty
Original Windows XP

Free : Keyboard, Mouse, Speaker
512MB DDR 1 RAM 1250/=
512 MB DDR 2 RAM 900/=
512 MB SD RAM 1250/=
5MB Web cam 1250/=
7.2 Dongle (E173)4250/=
8 GB Pendrive 1650/=
Head Phone 300/=
சகல விதமான கணினிகளும் உங்கள் வீடுகளுக்கோ அலுவலகங்களுக்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும்
Operating System Install/Repair
Hardware Repair,Virus Removal
Networking Setup,Remote support
PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur
021 222 4692
077 968 9043
077 135 0476
077 053 0566

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் நல்வாழ்த்துக்கள்
NALIN Information Technologies Pvt Ltd.
புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு
NALIN CITY SHOW ROOM
Laptop, Branded PC, Assemple PC,
எந்த கணனி நிறுவனமும் வழங்காத விலைக்கழிவுகளில் நளின் நிறுவனம் வழங்குகின்றது.( 3 நாட்கள் மட்டுமே)
Free
Computer Table
Head Phone
Delivery
Service
356,Luxan Plaza, Kasthuriyar Road, Jaffna.
www.nit.lk nalin@nit.lk Tel: 021 222 0838/ 0777667975 Fax: 021 222 4994
Nalin Information Technology Pvt Ltd
Palaly Road Parameswara Junction, Thirunerveli
Tel: 021 222 1166/ 0777667974

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.